
# திருக்கோயில்

மார்ச்சு 1992 விலை ரூ. 3





மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள
குடந்தை மகாமகப் பெருவிழாவில் பங்குகொண்டு
புனித நதிநீர்க் கலசங்களுக்குப் பூசனை புரிகிறார்கள்.

முகப்பு:

வடபழநி
அருள்மிகு வடபழநியாண்டவர்.

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

| மாலை. 34 | திருவள்ளுவர் ஆண்டு 2023 பிரஜோற்பத்தி ஆண்டு பங்குனி<br>மார்ச்சு 1992 விலை ரூ. 3-00 | மணி: 3 |
|---|---|---|

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

***உயர்திரு ஆணையர் அவர்கள்***
***இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை***
***சென்னை — 600 034***

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்

அருளாளர்கள் அருள் அனுபவம்
— திருமந்திரச் செம்மல்
திருமிகு டி.வி. வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ்.

திருக்கோயில்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களின் பிறந்தநாள் காணிக்கை

சிவராத்திரி
— ஸ்ரீசந்திரசேகரேந்திர சரசுவதி சுவாமிகள்

கந்தவேள் கருணை
— டாக்டர் திருமுருக கிருபானந்த வாரியார்

கும்பகோணம் தீர்த்தங்கள்

வல்லக்கோட்டைக்கு வாருங்கள்
வள்ளி மணாளனைப் பாருங்கள்
— எம்.வி. ரங்கநாதன்

கடவுளை அறியும் அறிவே ஞானம்
— ஞானச்சேரி ஞானிகள்

சித்திரபாரதம்,
— செவ்வேள்

கரும்பாயிரம் கேட்ட விநாயகர்
— ஜெயஸ்ரீ மூகாம்பிகை

குடந்தை நகர்த் திருக்கோயில்கள்
— கதிர். தமிழ் வாணன்

மக்கள் கடல் மோதிய மகாமகப் பெருவிழா
— குடவாசல் பாலசுப்பிரமணியம்

தெய்வத் தமிழ்
— டாக்டர் த. அமிர்தலிங்கம்.

அருளாளர்களின்

# அருள் அனுபவம்



திருமந்திரச்செம்மல்
டி.வி.வெங்கட்டராமன் ஐ.ஏ.எஸ்

**திருமிகு தலைமைச் செயலாளர் அவர்கள், தலைமைச் செயலகம், சென்னை-600 009**

(9)



'திருமந்திரச் செம்மல்'
**திருமிகு டி. வீ. வெங்கட்டராமன், ஐ.ஏ.எஸ்.**

நாம் பொறிகள், பனப், புத்தி, சித்தம் போன்ற கருவிகளைக் கொண்டு உலகத்தைப் பார்க்கிறோம். விஷயங்களை அனுபவிக்கின்றோம். அறிவைப் பெற்ற அகங்காரத்தை வளர்க்கின்றோம். இன்ப துன்பங்களில் ஈடுபட்டு பெற்ற அறிவே முடிவானது என்று கருதி வாழ்க்கையை நடத்தி வருகின்றோம். இந்த அறிவினால் நமக்குக் கிடைக்கும் சாதனைகள் நமக்கும், நம்முடைய உள்ளத்துக்கும் இடையில் ஓர் திரையைப் போட்டு உண்மையை மறைத்து விடுகின்றது. அறிவுக் கண்களால் நாம் பார்க்க முயல்வது இந்த விளைவை நமக்குத் தருகின்றது. ''இவ்வளவு காலம் அறிவுக் கண்களால பார்த்தேன். அருட்கண்களால் பார்க்க வில்லையே!''' என்கிறார் வள்ளலார். ''நூல் அறிவு பேசி நுழைவு இலாதார் திரிக!'' என்கிறார் காரைக்கால் அம்மையார். திருஞானசம்பந்தப் பெருமானோ,

''ஏதுக்க ளாலும் எடுத்தமொழி யாலும்மிக்குச்
சோதிக்க வேண்டா; சுடர்விட்டுளன் எங்கள்
சோதி;''

என்பார். அருட்கண்கள் என்று உண்டு. அவற்றை திறக்க நாம் பயில வேண்டும். அருட்கண்கள் திறக்கும்பொழுது பேரறிவினை நம்முள்ளேயே உணர்வுமயமாக அனுபவிக்க இயலும். இந்த உணர்வானது சொலலுக்கும், இலக்கியத்திற்கும், இலக்கணத்திற்கும் அப்பாற்பட்டது. நாயன்மார்கள், ஆழ்வார்கள் போன்ற அருளாளர்கள் தெய்வச் சான்றோர்கள் இந்த ஒப்பற்ற உணர்விலே மூழ்கித் திளைத்தவர்கள். சுந்தரமூர்த்தி நாயனார் தில்லைப்பெரும் கோயிலில் நடராசப் பெருமானின் ஆனந்த நடனத்தை தரிசித்து ''பேரின்ப வெள்ளத்தில் திளைத்து மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்'' என்று சேக்கிழார் பிரான் கூறுகின்றார்.

அருளாளர்களுடைய உணர்வில் இறைவன் ஆட வல்லானாக காட்சியளிக்கிறான். அவர்களுடைய கண்களுக்கு அண்டங்களின், பிரபஞ்சங்களின், பிண்டங்களின் அசைவுகள் இறைவனுடைய தனிப்பெரும் கூத்தாக, ஆனந்தக் கூத்தாகத் திகழ்கின்றன. என்னே இறைவனுடைய அருள் என்று வியக்கின்றார்கள். ஆனந்த எல்லைக்குச் சென்றுவிடுகின்றார்கள். நடப்பதும், நிற்பதும் எல்லாமுமே இறைவனுடைய அருள் என்கின்ற உண்மை அவர்களுடைய உள்ளத்தில நிரம்பி நிற்கின்றது. எங்கும், எதிலும் இறைவனுடைய பேரறிவு, பேராற்றல் ஆகியவற்றின் இயக்கத்தை உணர்ந்து மகிழ்கின்றார்கள். எங்கும் தங்கும் இறைவன் தனது அருட்சக்தியுடன் உயிர்கள் உய்ய இயக்கத்தை நடத்தி வருவது அவர்களுடைய அருட்கண்களுக்கு இறைவனுடைய ஒப்பற்ற திருக்கூத்தாக, விளையாட்டாகப் படுகின்றது.

''எங்குந் திருமேனி எங்குஞ் சிவசத்தி
எங்குஞ் சிதம்பரம் எங்குந் திருநட்டம்
எங்குஞ் சிவமா யிருத்தலால் எங்கெங்குந்
தங்குஞ் சிவனருட் டன் விளை யாட்டதே''

(திருமந்திரம்....2722)

# திருக்கோயில்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பிறந்தநாள் காணிக்கை

**மகாமகக் குளத்தில் வைத்துப் பூசனை செய்யப்பட்ட 20 புனிதநீர் வெள்ளிக்கலசங்களை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தம் பிறந்தநாள் அன்று [24-2-92] 20 திருக்கோயில்களுக்குக் காணிக்கையாக வழங்கினார்கள். அத்திருக்கோயில்களின் அர்ச்சகர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்து வெள்ளிக் கலசங்களைப் பெற்றுக் கொண்டார்கள். அத்திருக்கோயில்களின் விவரம் பின்வருமாறு :**

1. அருள்மிகு கந்தசாமி கோவில், திருப்போரூர்
2. ,, ரங்கநாதர் கோவில், ஸ்ரீரங்கம்,
3. அஷ்ட லட்சுமிகோவில், பெசண்ட் நகர்
4. காமகலா காமேசுவரர் கோவில், திருவல்லிக்கேணி.
5. கோதண்டராமர் கோவில், புன்னை நல்லூர்.
6. ஆஞ்சநேயர் கோவில், நங்கநல்லூர்.
7. அமிர்த கடேசுவரர் கோவில், திருக்கடையூர்.
8. சுப்பிரமணியசாமி கோவில், எட்டுக்குடி.
9. காளஹஸ்தீசுவரர் கோவில், காளஹஸ்தி.
10. சனீசுவரன் கோவில், திருநள்ளாறு.
11. கர்ப்பரட்சகாம்பாள் கோவில், திருக்கருகாவூர்.
12. கணபதி கோவில், கணபதி அக்ரகாரம் தஞ்சாவூர்.
13. வடிவுடை அம்மன் கோவில், திருவொற்றியூர்.
14. சூரிய நாராயணசாமி கோவில் சூரியனார் கோயில்.
15. வைத்திய நாதசாமி கோவில், வைத்தீசுவரன் கோவில்.
16. மாரியம்மன் கோவில், புன்னை நல்லூர்.
17. வனதுர்கா பரமேசுவரி கோவில், கதிரா மங்கலம்.
18. காளிகாம்பாள் கோவில், தம்புச் செட்டி தெரு, சென்னை.



19. ஏகாம்பரேசுவரர் கோவில், காஞ்சீபுரம்.
20. வரதராஜ பெருமாள் கோவில், காஞ்சீபுரம்.

---

நம் போன்றவர்களுக்கு இந்த உணர்வு ஏற்படுவதில்லை. எனவே, இதன் உண்மையை நம்மால் புரிந்து கொள்ள முடிவதில்லை. எல்லா இயக்கங்களும் இறைவனின் பேராற்றலை வெளிப்படுத்துகின்றது என்று நாம் நினைத்துப் பார்ப்பதில்லை. ஆனால், இன்றைய விஞ்ஞானம் இந்த விஷயத்தில் சற்று முன்னேறி உள்ளது.

இப்பிரபஞ்சத்தில் உள்ள அசையும் பொருள், அசையாப் பொருள் எல்லாவற்றிலும் நிரம்பியுள்ள அணுக்களைக் கூறிட்டுக் கொண்டே போனால் அவற்றின் உட்பகுதிகளில் நுண்ணிய பொருள்கள் வெகுவேகமாக நினைக்கமுடியாத அளவுக்குத் தோன்றி மறைகின்றன என்றும், அவையெல்லாம் ஒரு பெரும் இயக்கத்தில் ஈடுபட்டுள்ளன என்றும், அந்த இயக்கத்திற்கு அடிப்படையாக இருப்பது ஒரு பெரும் ஆற்றல் என்றும் இன்றைய விஞ்ஞானம் கூறுகின்றது. இந்த ஆற்றலை, அதன் அடிப்படையில் நடக்கும் இயக்கத்தை பேரருளாளர்கள் அன்றே உணர்ந்தனர். தம்முள் கண்டு

கொண்டனர். வெளியில் அனுபவித்தனர். தாங்கள் கண்டதைத் திருக்கூத்தென்று பெயரிட்டனர். இந்த அரும்பெரும் தாண்டவம் உயிர்கள் உய்வதற்காக நடக்கின்றது என்பதை மக்களுக்குப் போதிக்கவும், இந்தத் தாண்டவத்தின், அருட்சக்தியின் பெருமையை நாம் நமது மனதில் வைத்து, போற்றி வழிபாடு செய்வதற்கும்அருளாளர்கள் நமக்கு வழங்கியுள்ளது. எல்லையில்லாத இன்பத்தை என்றும் அளிக்க வல்ல நடராச திருவடிவமாகும்.

கைலாயத்தில் இறைவனைக் கண்ட காரைக்கால் அம்மையார் ''நீ ஆடுகின்றபோது நான் மகிழ்ந்து பாடிக்கொண்டு உன் திருவடியின்கீழ் இருத்தல் வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார். இறைவனும் அவரைத்திருவாலங்காட்டிற்கு அழைத்து அவனுடைய பெரு நடனத்தை அவர் கண்டு ஆனந்தித்து எப்பொழுதும் பாடிக் கொண்டிருக்கலாம் என்று அருட் புரிந்தான்.

திருவாலங்காட்டு இரத்தின சபையில் இறைவன் புரிவது ஊர்த்துவ தாண்டவம். சிதம்பரத்தில் இருப்பது கனகசபை. ஆடுவது ஆனந்தத் தாண்டவம். மதுரையில் வெள்ளியம்பலம். இங்கே இறைவன் பாண்டிய மன்னன் விருப்பத்திற்கேற்ப கால் மாறி ஆடுகின்றான். திருநெல்வேலியில் இறைவன் நடனமிடும் இடம் தாமிர சபையாகும். திருக்குத்தாலத்தில் இறைவனுடைய திருக்கூத்து சித்திர சபையில் நடைபெறுகிறது.

ஊர்த்துவ தாண்டவம் புரிந்தருளும் இறைவனைக் காரைக்கால் அம்மையார் பார்க்கின்றார். அவன் ஆடும் ஆட்டம் உலகத்தையே கிடுகிடுக்க வைக்கின்றது. ''இறைவனே நீர் வேகமாக ஆடினால் பாதாளம்பேர்ந்துபோகும். உனது திருமுடி அசைந்து ஆடும்போதுவானத்து உச்சி தகர்ந்துவிடும். நீ எட்டுத் தோள்களையும் வீசி நின்று ஆடும்போது எல்லாத் திசைகளும் பேர்ந்து மாறிவிடும். பிரபஞ்சமாகிய இந்த அரங்கு உனது ஆட்டத்தைத் தாங்காது. இதை அறிந்து ஆடும். மெலல ஆடும்.' என்கிற வகையில், சுவைபட காரைக்கால் அம்மையார் அற்புதத் திருவந்தாதியில் பாடுகின்றார்

''அடிபேரின் பாதாளம் பேரும்; அடிகள்
முடிபேரின் வான்முகடு பேரும்;-கடகம்
மறிந்தாடும் கைபேரில் வான்திசைகள் பேரும்;
அறிந்தாடும் ஆற்றாது அரங்கு ''

திருநாவுக்கரசர் நடராசப் பெருமானை தரிசிக்க வேண்டி திருத்தில்லை நகர் வந்தடைந்தார். திருக்கோயிலைச் சேர்ந்து, கோபுரத்தின் கீழ் விழுந்து, பணிந்து, கனகசபையினைக் கண்டு இறைவனுடைய திருநடனக் காட்சியின் எழிலில் மூழ்கினார். அப்போது அவருடைய கைகள் தலையின்மீது அஞ்சலிக்காக குவிந்தன. கண்கள் மழை பொழிந்தன. உட்கரணங்கள் உருகின. அன்பு பெருகிற்று. திருமேனி நிலத்தில் பல முறைகள் வீழ்ந்து எழுந்தது. இறைவனுடைய நடனத்தை கும்பிடும் அவருடைய ஆர்வம் அளவிடக் கூடாததாயிற்று. ''இறைவனை ஒன்றியிருந்து நினைமின்கள், கரணங்களை ஒருமுகப்படுத்துங்கள், அழுந்தி அறியுங்கள், காலனைக் கடிந்தவனை என்றும் தொழுமின்கள், இறைவனுடைய ஒப்பற்ற உருவத்தை கண்டு இன்பமடையுங்கள், இந்த மனிதப் பிறவியில் இதைவிட வேண்டுவதற்கு வேறொன்றுமிலலை. மீண்டும் இறைவனுடைய திருவுருவைக் காண வாய்ப்புகிடைக்குமாயின் இம்மண்ணுலகில் மற்றொரு முறை பிறந்தாலும் குறைவில்லை'' என்று பாடுகின்றார்.

திருத்தில்லையில் நடராசப் பெருமானை தரிசித்த சுந்தரமூர்த்தி நாயனாரின் அனுபவமும் அப்படிப்பட்டதே. அவருடைய ஐந்து பேரறிவுகளில் கண்களே செயல்பட்டன. கரணங்கள் எல்லாம் சிந்தையில் குவிந்தன. அகங்காரம் மறைந்தது. குணங்களில் சாத்துவிக குணமே முன் நின்றது. கைகளைக் குவித்து, கண்களில் ஆனந்தமாரி பெருக அவர் இறைவனைப் பாடினார், பரவினார், பணிந்தார். அவரது மனம்பேரின்ப வெள்ளத்தில் மூழ்கியது. இது போன்ற ஒப்பற்ற அனுபவங்களை அன்பர்களுக்கு நடராசப் பெருமான் வாரி வழங்குகின்றான். அவனுடைய மலர்ப் பொற்பாதத்தில் அன்பு வைப்பவர்களுக்கு காதலால் மிக்க மகிழ்ச்சி ஏற்படும். உடனே தம்மை அறியாமலேயே அவர்கள் மனதில் இறைவனுடைய அபார சக்தி பயத்தை உண்டாக்கும். அன்பு மிகுதியால் அவர்கள் விழுவார்கள்.பின்னர் எழுவார்கள். உடல் தளர்ச்சி பெறும். அவர்களுடைய ஐம்பொறிகளின் அறிவு கெட்டு தன் நினைவும் அறும். அவர்களுடைய திறமையும் குறைந்துபோகும். இறைவனுடைய நடனத்தை அனுபவித்த உடனேயே புறப்பொருள்கள் மீது பற்று அறுந்துவிடும். சித்தமானது புறப்பொருள்களை சீர்தூக்கிப் பார்க்கும் செயலை விட்டுவிட்டு சும்மா நிற்கும். உடனேயே சோர்ந்த உடலானது மீண்டும் புத்துயிர் பெற்று நிற்கும். ஆசை உண்டாகாது. உள்ளத்தில் ஆனந்தம் பெருகும். இறைவனுடைய நடனத்தை மேலும் மேலும் பார்க்க வேண்டும் என்ற ஆசை பொங்கி எழும்.

''விம்மும் வெருவும் விழும்எழும் மெய்சோருந்
தம்மையுந் தாமறி யார்கள் சதுர்கெடுஞ்
செம்மை சிறந்த திருஅம் பலக்கூத்துள்
அம்பலர்ப் பொற்பாதத் தன்புவைப்பார்கட்கே.
(திருமந்திரம்....2744)

''தேட்டறுஞ் சிந்தை திகைப்பறும் பிண்டத்துள்
வாட்டறம் கால்புந்தி யான் வரும்புலன்
ஓட்டறும் ஆசை அறும் உளத்தானந்த
நாட்ட முறுக்குறு நாடகங் காணவே''
(திருமந்திரம்...,.2745)

திருமூலர் ஓர் சிறந்த யோகியார். இறைவனுடைய அருளால் மெய்யுணர்வைத் தம்முள்ளேயே பெறுகிறார். உலக இயக்கமாகிய தனிப்பெரும் கூத்தை சிதம்பரத்தில் கண்டது மட்டுமின்றி தன் உள்ளத்திலும் காண்கின்றார். கண்ட பின்னர், பல காலம் யோக நிலையில் இருந்து மக்கள் உய்ய திருமந்திரம் அருளிச் செய்தார். அவருடைய உயிரானது உடம்பில் இருந்தாலும், உடம்போடு ஒட்டாத நிலையில் பன்னெடு நாள் இருந்தார்.

''தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பில் எழுகோடி யுகம்இருந் தேனே''
(திருமந்திரம்..74)

இது எத்தகைய திருக்கூத்து? அது நிகரற்ற அருள்வெளியில் நடக்கும் திருக்கூத்து என்கிறார் திருமூலர். அந்தத் திருக்கூத்தை புரிபவன் மாணிக்கம் போன்ற ஒப்புயர்வற்ற தன்மையை பெற்றவன். அவனே சிவன் எனும் செம்மேனி அம்மான். அந்தப் பேரின்ப நடனத்தை பார்த்து ரசிப்பவர் அருட்சக்தியாகிய உமையாவாள். சீவராசிகளுடைய வினைக்கேற்ப அவர்களுக்கு அருளைப் புரிந்து வரும் ஆதிபரன் தனது திருக்கூத்தாகிய பேரியக்கத்தின் மூலம் பல்வேறான செயல்களைப் புரிந்து வருகின்றான். சிவமும் சக்தியும் சேர்ந்தே இந்தத் தொழில் நடைபெறுகிறது. மாணிக்க மணிக்குள்ளே மரகதம் ஒளி வீசுவது போல் இருக்கின்றது இந்தக் காட்சி. மற்றும் மரகத மண்டபத்தில் செவ்வொளி பொருந்திய மாணிக்கம் வீற்றிருப்பது போலவும் இருக்கின்றது. இந்த சிவன், சக்தி சேர்க்கையால் ஆகிய இயக்கம், திருக்கூத்து மாற்றுக் குறையாத பசும்பொன்னாலாகிய திருவம்பலத்தில் நடைபெறுவதைக் காண, அனுபவிக்க எவ்வளவு கொடுத்து வைக்க வேண்டும்? அத்தகைய பேற்றினை அன்பர்கள் பெறுகிறார்கள். திருமூலர் இந்தப் பெருமையைப் பெற்றவர். அவருடைய உணர்வுகள் ஊற்றுப்பெருக்கெடுத்து ஓடுகின்றன.

''எவ்வாறு காண்பான் அறிவு தனக்கெல்லை
அவ்வா றருட்செய்வன் ஆதியரன் தானும்
ஒவ்வாத மன்றுள் உமைகாண ஆடிடுஞ்
செவ்வானிற் செய்ய செழுஞ்சுடர் மாணிக்கமே''
(திருமந்திரம்...130)

''மாணிக்கத் துள்ளே மரகதச் சோதியாய்
மாணிக்கத் துள்ளே மரகத மாடமாய்
ஆணிப்பொன் மன்றில் ஆடுந் திருக்கூத்தைப்
பேணித் தொழுதென்ன பேறுபெற் றாரே''
(திருமந்திரம்......131)

நடராசப் பெருமானைத் தம் மனக்கண்களால் பார்க்கின்றார். உடுக்கை பொருந்தியது வலக்கை. உடுக்கையிலிருந்து எழும்ஒலி உற்பத்திக்கு ஆதாரமாக அமைகின்றது. இடக்கை வீசிய நிலையில் உள்ளது. அவற்றின் நடுவே அபயமளிக்குப் கை, காத்தல் தொழிலைச் சுட்டிக் காட்டுகிறது மற்றொரு இடக்கை அனலை ஏந்தி உள்ளது. சங்காரத் தொழிலைக் காண்பிக்கின்றது. முயலகன் ஆணவத்தின் வடிவம். அவனை மிதித்த திருவடி மறைத்தல் தொழிலைக் காட்டுவது. தூக்கிய திருவடி அனுக்கிரகத்தைச் செய்கின்றது. இந்த அற்புதமான திருக்கூத்து இறைவன் பேரானந்தத்துடன் நடத்தி வரும் ஐந்தொழில்களை எடுத்து காட்டும். இது உயிர்களுடைய மேம்பாட்டிற்கே நடைபெறுகிறது என்பதையும் உணருதல்வேண்டும். திருவைந்தெழுத்தும் இந்த ஆனந்தக் கூத்தையே எடுத்துக் காட்டும். உடுக்கையைப் பற்றிய கை 'சி' என்ற எழுத்தைக் குறிக்கும்.

## சிவராத்திரி விரதம்

மாசிமாதம் கிருஷ்ணபட்சம் சதுர்த்தசி திதியில்

சிவபெருமானைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாகும்.

அன்றைய தினம் முழுவதும் உபவாசம் இருந்து இரவு

நான்கு யாமமும் உறக்கமின்றி சிவபூசை செய்ய வேண்டும்.

சிவநாம ஜெபம் செய்து நான்கு யாமமும்சிவாலய தரிசனம்

செய்ய சிவனருள் சித்திக்கும்.

எடுத்து வீசிய கரம் 'வா' ஆகும். அஞ்சல் அளிக்கும் அபயக் கரம் 'ய' ஆகும். தீஏந்தி நிற்கும் இடக்கரம் 'ந' காரமாகும். முயலகன் மீது ஊன்றிய திருவடி 'ம' காரமாகும். சகல தத்துவங்களையும் தன்னுள் அடக்கி நிற்கும் இறைவன் உடுக்கையால் தோற்றத்தையும், அபயக் கரத்தால் காத்தலையும், தீ ஏந்திய இடக்கையால் அழிப்பினையும், ஊன்றிய திருவடியால் மறைப்பையும், தூக்கிய திருவடியால் அனுக்கிரகத்தையும் செய்தருளுகின்றான்.

''மருவுந் துடியுடன் மன்னிய வீச்சு
மருவிய அப்பும் அனலுடன் கையுங்
கருவின் மிதித்த கமலப் பதமும்
உருவில் சிவாய நமவென வோதே'
(திருமந்திரம்...2798)

''அரன்துடி தோற்றம் அமைத்தல் திதியாம்
அரன் அங்கி தன்னில் அறையிற்சங் காரம்
அரனுற் றணைப்பில் அமருந் திரோதாயி
அரனடி.யென்று அனுக்கிரகம் என்னே''
(திருமந்திரம்....2799)

இறைவனுடைய நடனம் உயிர்களைப் பல வகைகளில் ஆனந்தத்தில் அழுத்தி வைக்கும் செயல் உடையது. ஆகவே அது ஆனந்தக் கூத்தாயிற்று. திருவருள் நிலையே ஆனந்தக் கூத்தாகும். இறைவன் பேரின்ப உருவினன். அவனுடைய பேரறிவும் பேராற்றலும் உயிர்களுக்கு சதா இன்பமளிப்பதற்கே பயன்படுகின்றன. இதுவே சிவானந்தக் கூத்தாகும். அன்பர்களுக்கு பேரின்பம் விளைவிக்கும் நடனமாகும். பரம்பொருள் ஞானத்திற்கு இருப்பிடம். உயிர்களுக்கு அன்பு செய்யும் சக்தி ஆற்றலுக்கு இருப்பிடம். இவை இரண்டும் சேர்ந்து புரியும் ஆனந்த நடனம் உயிர்களுக்கு பேரின்பத்தைத் தருவது. உருவமில்லாத பெருமான் உயிர்கள் பொருட்டு ஐந்தொழில்களை

நடத்துவதற்காக உமையுடன் சேர்ந்துபுரியும் இந்த திருக்கூத்து இறைவனின் ஒப்பற்றஅருட் தன்மையை விளக்கிக் காட்டுகிறது. இந்தத் திருக்கூத்தே வேதங்களின் மெய்யுண்மைகளிலும், ஆகம அறிவிலும் கீதங்களின் உணர்வுகளிலும் அண்டங்கள் பலவற்றிலும் ஐம்பூதங்களின் சேர்க்கையிலும், எல்லாவிதமான புவனங்களிலும் விரிந்து நடந்து இறைவனின் மெய்யுண்மையைப் புலப்படுத்தும்.

''வேதங்க ளாட மிகுஆ கமமாடக்
கீதங்க ளாடக் கிளரண்டம் ஏழாடப்
பூதங்க ளாடப் புவன முழுதாட
நாதங்கொண் டாடினான் ஞானானந்தக்
கூத்தே''

(திருமந்திரம்..2729)

அவ்வாறே ஐம்பூதங்கள், ஐம்பொறிகள், ஐம்புலன்கள், பல கலைகள், காலம், பல ஊழிகள், அண்டங்கள், பலவகைப்பட்ட அறிவுகள் ஆகிய எல்லாவற்றிலும் இறைவன் கலந்திருப்பதால், அவைகளுடைய இயக்கம் இறைவனுடைய திருக்கூத்தினை வெளிப்படுத்துவதாகும்.

இறைவன் ஆடும் திருநடனத்தை திருமூலர் சிவானந்தக் கூத்து, சுந்தரக் கூத்து, பொற்பதிக்கூத்து, பொற்றில்லைக் கூத்து, அற்புதக் கூத்து என்று வகைப்படுத்துகின்றார். அண்டங்கள், பிண்டங்கள், உயிர்களின் உள்ளங்கள், உடல்களின் பல நிலைகள் ஆகியவற்றின் இயக்கங்களையே இவ்வகைக் கூத்துகளாக திருமூலர் விளக்குகின்றார்.

இறைவனுடைய நடனம் எல்லாத் திசைகளிலும் பரவி நிற்கின்றது. அருவ நிலையில் இருக்கக்கூடியஇறைவன் அருவுருவ நிலையிலும் பொருந்தி ஐந்தொழிலை நடத்துவான். இந்த அருவுருவ நிலையில் தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு, உச்சி ஆகிய அற்புதமான ஐம்முகங்கள் அமைந்துள்ளன. அவையேஅகோரம், வாமதேவம், தற்புருடம், சத்தியோஜாதம், ஈசானம் எனப்படும். இந்த எல்லாப் பகுதிகளிலும் இறைவன் பொருந்தி ஒப்பற்ற நடனத்தை புரிந்து அருளுகின்றான். அதாவது ஐந்தொழில் இயக்கத்தை நடத்துகின்றான்.

''தெற்கு வடக்குக் கிழக்குமேற்கு உச்சியில்
அற்புத மானதோர் அஞ்சு முகத்திலும்
ஒப்பில்பே ரின்பத்து உபய உபயத்துள்
தற்பரன் நின்று தனிநடஞ் செய்யுமே''

(திருமந்திரம்....2739)

இறைவன் ஆகாயத்தில் நடனம் புரிகின்றான். அன்பு கலந்த அடியார்களாகிய உத்தமர்களிடையே நடனம் புரிகின்றான். சீவராசிகளைக் காக்கும்பொருட்டு அவர்களுடைய மனவெளிகளில் தங்கி ஆடிக்கொண்டிருக்கின்றான். உயிர்களோடு நெருங்கிக் கலந்துள்ளான். அவைகளின் உணர்வில் உள்ளான். அவைகளின் உணர்விற்கு அப்பால் தன்னந்தனி நிலையிலும் இருப்பான். இவ்வாறெல்லாம் பல வகைகளில் திருக்கூத்து புரியும் சிவபெருமானைத் தான் இன்புற நாடி தனது உள்ளத்தில் வைத்ததாக திருமூலர் கூறுகின்றார்.

''உம்பரிற் கூத்தனை உத்தமக் கூத்தனைச்
செம்பொற் றிருமன்றுட் சேவகக் கூத்தனைச்
சம்பந்தக் கூத்தனைத் தற்பரக் கூத்தனை
இன்புற நாடிஎன் அன்பில்வைத் தேனே''

(திருமந்திரம்..2742)

சிவன் நடனம் செய்தமையால் பிரிவின்றி நிற்கும் சக்தியும் ஆட, அதனால் சகல தத்துவங்களும் ஆட, சதாசிவம் ஆட, உயிர்களுடன் ஒட்டி நிற்கும் சித்தமும் ஆட, அசைவன, அசையாதன ஆகிய எல்லாம் ஆட, உடலில் உள்ள ஆதாரங்கள் ஆட, நான்மறைகளும் ஆட சிவபெருமான் ஆனந்தக் கூத்து ஆடி அருளுகின்றான்.

''தத்துவம் ஆடச் சதாசிவந் தானாடச்
சித்தமும் ஆடச் சிவசத்தி தானாட
வைத்த சராசரம் ஆட மறையாட
அத்தனும் ஆடினான் ஆனந்தக் கூத்தே''

(திருமந்திரம்.....2789)

இந்த ஆனந்த நடனத்தை தம்முள்கண்டவர்கள் திருமூலரைப் போன்ற யோகிகள். உயிர்களுக்கு உலக அனுபவங்களைக் கொடுத்து மலங்களை நீக்கி, ஞானத்தைக் கொடுத்து முக்தி இன்பத்தை வழங்குவதே இறைவனுடைய அருட்சக்தியாகும். இதையே நடனமாகக் கண்டு, இந்த நடனத்தை தம்முள் சூட்சும நிலையில் யோகிகள் உணர்ந்து கொள்வார்கள். இந்த ஞான நடனம் நம்முடைய உடலிலேயே ஏழு ஆதாரங்களில் நடைபெறுகின்றது என்று நம் நாட்டுச் சித்தர்கள் கண்டறிந்தார்கள். நம்முடைய உயிர்ப்பின் அசைவிலே இந்த உண்மையை அவர்கள் தெரிந்து கொண்டார்கள். பிராணாயாமம், யோகம், தியானம், சமாதி போன்றவைகளைக் கடைப்பிடித்து, உயிர்ப்பினைஒடுக்கி, ஐம்புலன்களைக் கட்டுப்படுத்தி, உள்ளத்தைத் தெளியவைத்து, களிம்புகள் நீங்கிய நிலையில் அருளாளர்கள் மெய்ப்பொருளின் அற்புத ஆற்றலை தம்முள் கண்டு கொண்டார்கள். சிவபெருமானுடைய ஆடும் திருவடியையும், அந்த ஆட்டத்திலிருந்து உதிக்கும் நாதத்தையும், அந்த நாதத்திலிருந்து வெளிப்படும் ஓசைகளையும், ஒலிகளையும், பற்பல அசைவுகளையும் தனது உள்ளத்தில் கண்டதாகத் திருமூலர் கூறுகின்றார். அதே மாத்திரத்தில் வினையும், வினையால் வரும் பிறவித் துன்பமும் தன்னை நீங்கி நிற்பதையும் திருமூலர் கண்டறிந்தார்.

''ஆடிய காலும் அதிற்சிலம் போசையும்
பாடிய பாட்டும் பலவான நட்டமும்
கூடிய கோலங் குருபரன் கொண்டாடத்
தேடியு ளேகண்டு தீர்ந்தற்ற வாறே''.

(திருமந்திரம். 2760)

(இதன் தொடர்ச்சி 32-ஆம் பக்கம் பார்க்கவும்)

# சிவராத்திரி மகிமை



ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள்

அநேகமாக எலலா சிவாலயங்களிலும் கர்ப்பக் கிரகத்தின் சுவரில் மேற்குப் பாகத்தில் லிங்கோத்பவ மூர்த்தியின் பிம்பம் இருக்கும்.

அந்த மூர்த்திதான் சிவாலயத்திலுள்ள லிங்கத்துக்குப் பின்புறம் காணப்படுவது. அதில் லிங்கத்துக்குள் ஒரு திவ்யமூர்த்திஇருக்கும். அதன் ஜடாமகுடம் லிங்க வட்டத்துக்குள்முடியாமலே இருக்கும். அதன் பாதமும் லிங்கத்தின் அடியில் முடிகிறவரைக்கும் தெரியாது. இந்த மூர்த்திக்கு கீழே ஒரு வராக மூர்த்தி இருக்கும். மேலே ஹம்ச ரூபத்தில் ஒரு மூர்த்தி இருக்கும்.

இந்த லிங்கோத்பவர் யார்?

ஸ்ரீ ருத்ராபிஷேகப் பண்ணுவதற்கு முன்பு ஒரு சுலோகம் சொல்லிவிட்டு அப்புறம்தான் அபிஷேகம் பண்ணுவது வழக்கம். அந்த சுலோகம்.

''ஆபாதால நப: ஸ்தலாந்த புவன
ப்ரஹமாண்டமான விஸ்புரத்
ஜ்யோதி; ஸ்பாடிக லிங்க மௌலி விலஸத்
பூர்ணேந்து வாந்தாம்ருதை:
அஸ்தோகாப்லுதம் ஏகம் அகம் அநிசம்
ருத்ரானுவாகான் ஜபந்
த்யாயேத் ஈப்ஸித ஸித்தயே(அ)த்ருதபதம்
விப்ரோ மிஷிஞ்சேத் சிவம்''

இந்த சுலோகத்தில் என்ன தெரியுமா சொல்லியிருக்கிறது? பாதாள முதல் ஆகாச பர்யந்தம் எல்லையில்லாதஜோதி ஸ்வரூபமாகப் பிரகாசிக்கின்ற ஸ்படிக லிங்கத்துக்கு அபிஷேகம் பண்ணவேண்டும் என்று சொல்லியிருக்கிறது.

ஸ்படிக லிங்கத்துக்கு ஒரு வர்ணமும் சொல்லமுடியாது. எந்த வஸ்துவை அதில் வைக்கிறோமோ அதனுடைய வர்ணத்தை அது பிரதிபலிக்கும். குண தோஷம் இல்லாதது அது. ஞானம் எப்படிப் பரிசுத்தமாக இருக்கிறதோ, அப்படி அந்த ஸ்படிக லிங்கம் இருக்கிறது. அதன்பின் பச்சை விலவத்தை வைத்தால், லிங்கமே, பச்சையாகத் தோன்றும். சிவப்பான அரளியை வைத்தால் சிவப்பாகத் தோன்றும். அது நிர்விகாரமானது. பரப் பிரம்ம ஸ்ரூபவம் நிர்விகாரமாக இருந்தாலும், நம்முடைய மனோபாவத்தை எப்படி வைக்கிறோமோ அப்படித் தோன்றும் என்பதற்குத் திருஷ்டாந்தமாக, இந்த ஸ்படிக லிங்கம் இருக்கிறது. அது எதையும் மறைக்காது. அதற்குப் பின்னால் உள்ள வஸ்துக்களையும் அதன் வழியாகப் பார்க்கலாம். பரம சுத்தமாக நிஷ்களங்கமாக இருக்கும். நிர்குணமான பரமாத்ம வஸ்துவுக்கு அது திருஷ்டாந்தம். நினைக்கிற ரூபமாக அது தெரியும்.

மேலே சொன்ன சுலோகப்படி, அதன் சிரஸில் பூரணசந்திரன் இருக்கிறது. ''பூர்ணேந்து'' என்று சுலோகத்தில் வருவது. 'பூர்ண இந்து' இந்து என்றாலும் சந்திரன் என்றாலும் ஒன்றுதான். ஈசுவரன் ஜடையும், கங்கையும் கண், காது, மூக்கு கை, கால் முதலிய அவயங்களும் கொண்ட 'சகள'' ரூபத்தில் வருகிறபோது, அவர் மூன்றாம் பிறையை வைத்துக் கொண்டு சந்திர மௌலியாக இருக்கிறார். ரூபமே இல்லாத பரமாத்மா 'நிஷ்கள' தத்வமாயிருக்கிற போது, அங்கே சந்திரன், கங்கை எதுவும் இல்லை. அரூபமாயும் இல்லாமல், ஸ்வரூபமாயும் அவயங்களோடு இல்லாமல், லிங்கமாக சகள-நிஷ்களமாக இருக்கிறபோது அவர் பூர்ண சந்திரனை உச்சியில் வைத்திருக்கிறார். அதிலிருந்து அமிருதமே கங்கை மாதிரி கொட்டுக்கிறது.

ஸ்கல பிரம்மாண்டமும் சிவலிங்கம்தான். ஸ்ரீருத்ரத்தில் இப்படியே சொல்லப் பட்டிருக்கிறது. சர்வ பதார்த்தங்களும், நல்லது கெட்டது எல்லாம் சிவ ஸ்வரூபம் எனறு ஸ்ரீ ருத்ரம் சொல்லுகிறது.

லிங்கம் ஏன் வட்ட வடிவமாயிருக்கிறது? வட்டமான ஸ்வரூபத்துக்குத்தான் அடி முடியில்லை; ஆதியில்லை. அந்தமுமில்லை. மற்றவைகளுக்கு உண்டு. ஆதியந்தம் இலலாத வஸ்து சிவம் என்பதை லிங்காகாரம் காட்டுகிறது.

சரியான வட்டமாக இல்லாமல், லிங்கம் நீள வட்டமாக இருக்கிறது. பிரபஞ்சமே ''எல்லிப்டிக்'' காகத்தான் இருக்கிறது. நம் சூரிய மண்டலத்தை எடுத்துக் கொண்டாலும் கிரகங்களின் அயனம் நீளவட்டமாகத்தான் இருக்கிறது என்று நவீன விஞ்ஞானத்தில் சொல்வதும், பிரமாண்டமும் ''ஆவிஸ்புரத்'' என்று சாஸ்திரம் சொல்லும் லிங்க ரூபத்துக்கு ரொம்ப ஒற்றுமையாக இருக்கிறது.



யாராவது உறவினரை நினைக்கிறோம் சந்தோஷமாயிருக்கிறது; ஆனால் அவருடைய உருவத்தையும் பார்த்தால்தான் சந்தோஷம் பூரணமாகிறது. அவ்வாறே உருவற்ற சிவமும் ஒரு உருவத்தோடு வந்து அநுக்கிரகம் பண்ணினால்தான் ரொம்ப சந்தோஷமாக இருக்கும். ஞானிகளுக்கு மட்டுமே பரமாத்ம ஸ்வரூபத்தின நிராகார (அருவ) உண்மை புரியும். உருவத்தைப் பார்த்துப் பார்த்து ஆனந்தம் அனுபவிக்கிற நமக்கு உருவத்தோடு கண்டால்தான் ஆனந்தம் உண்டாகும். அதற்காகத்தான் உருவமற்ற பரமேசுவரன், அருவுருவமான லிங்கமானதோடு நில்லாமல், அந்த லிங்கத்துக்குள்ளேயே திவ்வியரூடம் காட்டும் லிங்கோத்பவ மூர்த்தியாக இருக்கிறார். இப்படி ரூடத்தைக் காட்டினாலும், வாஸ்தவத்தில் நமக்கு அடியும் இல்லை, முடியும் இல்லை. அதாவது ஆதியும், அந்தமும் அற்ற ஆனந்த வஸ்துவே தாம் என்று உணர்த்துவதற்காக, மேலே லிங்க வட்டத்துக்குள் ஜடாமுடி முடியாமலும், கீழ அதே மாதிரி தம் பாதம் அதற்குள் அடங்காமலும் இருப்பதாகக் காட்டுகிறார்.

அடிமுடி எல்லை இல்லாமல், அவர் ஜோதி சொரூபமாக நின்றார். ஜ்யோதிர்லிங்கமாக, ஆகாயத்துக்கும் பூமிக்குமாகப் பரமசிவம் உத்பவித்த இரவே சிவராத்திரியாகும்.

அப்படி ஜோதி சொரூபமாகப் பரமேசுவரன் நின்றபொழுது, விஷ்ணு அவரது பாதத்தைப் பார்க்க பாதாளத்துக்குப் போனார். பூமியைத் தோண்டும் சுவாபம் வராகத்துக்கு உண்டு. எனவே, அந்த ரூபத்தை எடுத்துக் கொண்டார். பிரம்மா அம்ச சொரூடமானார். பட்சிக்குப் பறப்பது சுபாவம். அன்னப்பறவை பட்சியாகப் பறந்து ஜோதிர்லிங்கத்தின் முடி தேடிப் போனார். இரண்டு பேருக்கும் தேடிப் போனவை அகப்படவில்லை. அன்னம் வந்தது. 'நான் கண்டுவிட்டேன்' என்று பொய் சொல்லியது. அதனால்தான் பிரம்பாவுக்குப் பிரத்தியேகமாகப் பூஜை இல்லாமற் போய்விட்டது பரிவாரமாக மட்டும் வைத்துப் பூஜை செய்வதுண்டு. புராண ஐதிகத்தில் இப்படி இருக்கிறது.

பிரம்மா அன்னப்பறவை ரூபமாக போய்ப்பார்த்தும் சிவபெருமானின்சிரஸ் அகப்படவில்லை என்றும், விஷ்ணு வராக ரூபமாகப் போயும் பாதம் அகப்படவில்லை என்றும் சொல்வதன் தாத்பரியம் என்னவென்றால், பரமாத்மா ஆதி அந்த மில்லாத வஸ்து என்பது தான்; சிருஷ்டி, பரிபாலனம் எல்லாவற்றையும் கடந்த வஸ்து அது என்பதுதான். இப்படி அடி முடி தேடி பிரம்மாவும் விஷ்ணுவும் பெற முடியாதவரையே, 'என் சாமர்த்தியத்தால் அறியமுடியும்' என்கிற அகங்கார மில்லாமல் அன்போடு பக்தி செய்து உருகினால், வெகு சுலபத்தில் அவர் நமக்கு ஆகப்பட்டுவிட்டார்.

சகல பிரபஞ்சமும் அடங்கியிருக்கிற லிங்க ரூபமானது ஆவிர்பவித்த சிவராத்திரி மகா சதுர்த்தசி இரவில், அவரை அப்படியே ஸ்மரித்து ஸ்மரித்து அவருக்குள் நாம் அடங்கியிருக்க வேண்டும் அதைவிட ஆனந்தம் வேறில்லை.

**நன்றி : சுவாமிகளின் தெய்வத்தின் குரல்**
முதற்பகுதி

# கந்தவேள் கருணை



டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

## [ 49 ]

முருகப் பெருமான் செந்திற்பதியில் தேவ தச்சனைக் கொண்டு ஒரு அழகிய திருக்கோயில் நிறுவச் செய்து அக்கோயிலில் சிவலிங்கம் வைத்து அன்புடன் வழிபட்டார். ஒவ்வொரு மலராகப் போட்டுக் கொண்டே வந்தார். அந்த அர்ச்சனையில் அகம் கரைந்த மால், அயன், பிரம்மா முதலிய தேவர்கள் கடைசி அர்ச்சனையின் போது பரவசப்பட்டு 'முருகா' என்று கூவினர். அப்போது கையிலெடுத்த பூவுடன் திருப்பிக் காட்சிக் கொடுத்தார் கந்தப் பெருமான். திருச்செந்தூரில் இன்னமும் அப்படித்தான் ஒரு கரத்தில் அர்ச்சனை மலர் கொண்டவராக சுவாமியின் கோலம் இருக்கிறது. பெரியவர்களைப் பூஜையில் காண்பது மற்ற சந்தர்ப்பங்களில் காண்பதைக் காட்டிலும் பெருமை. ஆகவே, மற்ற கோவில்களில் உள்ளசுவாமியைவிடத் திருச்செந்தூரில் உள்ள முருகப் பெருமானுக்குப் பெருமை அதிகம்.

பூஜை புரிந்த பெருமான் பிறகு தேவர்களின் பூஜையைத் தாமும் பெற்றார். ''உங்களுக்கு இன்னமும்ஏதேனும் குறைகள் இருந்தால் கூறி, வேண்டிய வரங்களைக் கேட்டு உய்வு பெறுங்கள்'' என்று திருவாய் மலர்ந்தருளினார். ''எம்பெருமானே'' அடியேங்கட்கு இனி ஒரு குறைவும் இல்லை. தங்கள் திருவடியில் நீங்காத அன்பைத் தந்தருளவேண்டும்.'' என்று தேவர்கள் வேண்டிக் கொண்டார்கள். ஆறுமுகவள்ளல் அவ்வரத்தை நல்கினார். அன்றைய இரவு கழியக் கதிரவன் கீழ்வானில் உதயமானான்.

செவ்வேள் செந்திற்பதியை நீங்கிப் பரிவாரங்களுடன் மயில் வாகனத்தில் புறப்பட்டார். அப்போது நான்முகன், திருமால், இந்திரன், படைவீரர்கள் முதலிய யாவரையுத் கௌரவிக்கக் கருதினார். பிறருக்கு மதிப்பும் தரும் மாண்புடன் அவர்களைப் பார்த்து, நீங்களும் உங்கள் வாகனங்களில் ஏறி நமக்குப் பக்கத்தில் புறப்பட்டு வாருங்கள்'' என்று திருவாய் மலர்ந்தருளினார். அதன்படி அவர்களும் புறப்பட்டனர்


தேவர்கள் தங்கள் வாகனங்களில் ஏறி ஆறுமுகப் பெருமானிடம் செல்ல இரண்டாயிர வெள்ளம் பூதர்களும் வந்து நெருங்கினார்கள். பூதூளியினால் தேவலோகம் பூமியாகியது. குடை, கொடி, ஆலவட்டம் முதலியன நெருங்கின. வேத ஒலியும், தேவர்களுடைய வாழ்த்தொலியும், முருகக் கடவுளின் ஊர்தியாகிய மயிலும், கொடியாகிய கோழியும்கூவும் ஒலிகளும் எங்கும மங்கலமாகப் பரவின. திக்விஜய பிரதாபரான ஆறுமுகக் கடவுள் மதுரை திருநகரில் மேற்றிசையில் விளங்கும் திருப்பரங்குன்றம் அடைந்தார்.

திருப்பரங்குன்றத்தில் தவம் செய்து கொண்டிருந்த பராசர புதல்வர் அறுவரும், பிரமா முதலிய தேவர்களும் ஆறுமுகக் கடவுளை வணங்கி, ''சுவாமி! தேவரீர் இக்குன்றத்தில் வீற்றிருக்க வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார்கள். அவர்கள் விருப்பத்தின்படி திருப்பரங்குன்றத்தின் சாரலில் பூதசேனைகளுடன் ஏறிச் சென்றார் வேதநாயகன். தேவதச்சன் எம்பெருமானுக்காக அக்குன்றின் மீது அளவற்ற விதிகளையும், கோயில்களையும், சோலைகளையும், வாவிகளையும் அமைத்தான். ஆறுமுகக் கடவுள் அமரர் அனைவரையும் மத்திய கலாமண்டபத்தில் அவரவர்கட்குரிய இடங்களில் அமரச் செய்து மயில்வாகனத்தினின்றும் இறங்கிச் சிற்சபையில் அமைக்கப்பட்டிருந்த திவ்விய சிங்காதனத்தின் மீது அமர்ந்தார். காட்சி என்றால் அதுவல்லவோ காட்சி!

மனம் நிரம்பி வழியப் பெற்ற தேவர்கள் அவரவர் இருப்பிடம் சென்றனர். தாங்கள் முன்பு இழந்திருந்து இன்று இறையருளால் திரும்பப் பெற்ற பொன்னுலகுக்குச் சென்றனர். வீரவாகுதேவரும் இலக்கத்தெண்மரும், பூதசேனைத் தலைவர்களும் எம்பெருமானின் திருவடிகளை வணங்கி ஏவல் செய்து கொண்டிருந்தார்கள்.

பராசரர் புதல்வர்கள் அறுவரும் முருகப் பெருமானை வணங்கித் துதித்தனர். முன்னர் சிவபெருமான் அவர்களுக்குக் கூறியிருந்தவாறு ஆறுமுகக் கடவுள் அவ்வறுவருக்கும் ஞானோபதேசம் புரிந்தருளினார்.

தன் பகைவனாகிய சூரபன்மனை அழித்துப் பொன்னுலக அரசாட்சியை தனக்குத் தந்தருளிய வேற்படையண்ணலுக்குத் தன் மகளாகிய தெய்வயானையைத் திருமணம் செய்து கொடுக்க, எண்ணினான் இந்திரன். தன் கருத்தைத் திருமால், நான்முகன் முதலியோரிடம் தெரிவித்தான். அவர்களும் அதனைக் கேட்டு மிக நல்லது, அவள் ஏற்கனவே



முருகனைக் கணவனாக அடைய விருப்பித் தவம் புரிந்தவள். ஆகையால் திருமண ஏற்பாடுகளை விரைந்து செய்'' என்று கூறினர்.

இந்திரன் தூதர்களை அனுப்பி மேரு மலையிலிருந்து தன் மனைவி இந்திராணியையும் மகள் தெய்வயானையையும் அழைத்து வரச் செய்தான். அவர்கள் திருப்பரங்குன்று வந்து சேர்ந்து இந்திரனையும் சயந்தனையும் கண்டு மிக மகிழ்ந்தார்கள்.

இந்திரன் தேவர்களோடு சென்று ஆறுமுகப் பெருமானை வணங்கித் துதித்துத் தன் மகளாகிய தெய்வயானையைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என விண்ணப்பித்தான். முருகப் பெருமானும் அதற்கு இசைந்து மறுநாளே திருமணம் புரிவதாகத் தெரிவித்தருளினார். இந்திரன் முசுகுந்தச் சக்கரவர்த்திக்கும் ஏனைய அரசர்கட்கும் தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் தூதர்கள் மூலம் மறுநாள் திருமணம் என்று அழைப்பு விடுத்தனன். தேவதச்சன் மூலம் திருப்பரங்குன்றத்தில் திருமண மண்டபத்தையும் திருமணத்திற்கு வருவோர்கள் தங்குவதற்கு விடுதிகளையும், பிறவற்றையும் தேவதச்சனைக் கொண்டு ஒழுங்கு செய்தான்.

திருக்கயிலாய மலையில் ஒரு சோலையில் வில்வமரத்தடியில் அமர்ந்து சிவபெருமான் சிவகாமசுந்தரிக்கு சிவாகமங்களை உபதேசித்துக் கொண்டிருந்தார். வில்வமரத்திலிருந்து கருங்குரங்கு வில்வ இலைகளை உருவி இறைவன் மீதும் இறைவி மீதும் இட்டது. காற்றில் இலைகள் உதிர்கின்றன என்று எண்ணிய எம்பிராட் தலைமீது வீழ்ந்த இலைகளைத் தள்ளினார். விளையாட்டாக அம்முசு மேன்மேலும் இலைகளைப் பறித்துப் பறித்து முடியிலும் அடியிலும் பெய்தது. சிவகாமசுந்தரி பேலே சிறிது சீற்றத்துடன் பார்த்தருளினார். பரமேச்சுரன் ''பார்வதி! எலலாவுயிர்களும் உன் குழந்தைகள். உன் குழந்தைகளாகிய குரங்கு நம் மீது இட்டது வில்வந்தானே? நீ சினம் செய்யற்க'' என்றார். அம்பிகையின் திருக்கண்ணோக்கம் பெற்றதனால் குரங்கு அஞ்ஞானம் நீங்கி மெய்ஞ்ஞானம் வரப்பெற்று மரத்தைவிட்டு, இறங்கி, அம்மையப்பனுடைய அடிமலர் மீது வீழ்ந்து அழுது, தொழுது. "சிறியேன அறியாது செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டும்'' என்று வேண்டி நின்றது.

குன்ற வில்லியாம் குழகன், ''குரங்கே!'' நீஇரங்கற்க, இட்டது வில்வந்தானே, ஒரு வில்வத்தால் நம்மை அருச்சித்தவர் எல்லா நலன்களையும் எய்துவர். தெரிந்தோ தெரியா

மலோ மிதித்தவரை நெருப்புசுடும். அதுபோல் தெரிந்தோ தெரியாமலோ செய்த சிவ புண்ணியம் நிச்சயமாகப் பயனைத் தரும். வேடிக்கையாக இட்டாலும், இட்டது வில்வம். அதனால் நீ மண்ணுலகில் அரசனாகப் பிறந்து சிறந்த செல்வ நலன்களை அனுபவிப்பாயாக'' என்று அருள் புரிந்தார்.

குரங்கு நடுங்கி ஒடுங்கி, ''எந்தையே! வேண்டாம். இக்கயிலையில் நான் புழுவாக வேண்டுமானாலும் பிறப்பேன். பொய் மலிந்த பூவுலகில் பிறக்க அஞ்சுகின்றேன்''! என்றது.

சிவபெருமான் ''வானரமே! செய்த கன்மங்களை நுகர்கின்ற இடம் பூதலமேயாகும். ஆதலால் உயர்ந்த குலமாகிய அரிச்சந்திர குலத்தில் பிறந்து சக்கரவர்த்தியாக வாழ்ந்து பின்னர் நமது கயிலைக்கு வருவாயாக'' என்று பணித்தருளினார்.

குரங்கு,'' ஐயனே! தாங்கள் கட்டளையிட்ட வண்ணம் பிறக்க இசைகின்றேன். ஆனால் குரங்கு முகத்துடன் பிறக்க வேண்டும். கண்ணாடியில் காணுந்தோறும் முற்பிறப்பின் நினைவு வர வேண்டும். சிவபக்தியில் சிறக்க வேண்டும்'' என்று யாசித்தது. அரனார் அவ்வண்ணமே யாகட்டும்'' என்றார்.

ஆதித்தன் குலத்திலே அரிச்சந்திரன் மரபில் அக்குரங்கு வந்து பிறந்தது. முசுமுகத்துடன் பிறந்து கரூரைத் தலைநகரமாகக் கொண்டு குந்தம் என்ற ஆயுதத்தைத் தாங்கி அரசாண்டு முசுகுந்தன் என்று பேர் பெற்றது.

தெய்வயானையம்மையின் திருமண ஓலை முசுகுந்தனுக்குக் கிடைத்தது. ஓலைதந்தானுக்குப் பொன் மழை பொழிந்தார் முசுகுந்தச் சக்கரவர்த்தி. தூதுவர்கள் சென்ற பிறகு தனது நகர மக்களும் பிறரும் ஆறுமுகக் கடவுளின் திருமணத்தைத் தரிசிக்கச் செல்லுமாறு யானையின்மீது முரசறையும்படி கட்டளையிட்டான். மறுநாள் திருமண மண்டபத்திற்கு எல்லோரும் சென்று சேர்ந்தார்கள். இந்திரன் திருமால், நான்முகன் முதலாயினோருடன் சென்று முருகக் கடவுளை வணங்கி திருமணச் சாலைக்கு எழுந்தருள வேண்டினர். முருகப் பெருமானும் முன் நின்ற மயில் வாகனத்தின் மீது ஏறி, சூரியனும் சந்திரனும் குடைபிடிக்க வாயு சாமரம் வீச, வருணன் ஆலவட்டம் அசைக்க, இயமன் வாட்படை ஏந்திவர, சேவல் ஒலியெழுப்ப, பல்வகை வாத்தியங்கள் முழங்க, முனிவர்கள் பூதர்கள் முதலியோர் உடன் வரத் திருமணச் சாலையையடைந்து வாகனம் விட்டிறங்கி மண்டபத்தில் வீற்றிருந்தனர். சிவபெருமானும் உமா தேவியரோடு கணங்கள் சூழ எழுந்தருளினார். முருகப் பெருமான் அவர்களை வணங்கினார். விண்ணிலிருந்து வந்திறங்கிய ஒரு சிங்காதனத்தில் சிவபெருமான் உமையோடு வீற்றிருந்தார். இந்திரனும் சிவபெருமானிடம் திருமணம் செய்து கொடுக்க அனுமதி பெற்று தெய்வயானையம்மையை அந்தப் புரத்திலிருந்து அழைத்து வந்தான்.

தெய்வயானை அந்தக் கல்லின் மீது நடந்தபோது, கிண்கிணி 'அந்தோ! என் அன்னை இக்கல்லின் மீது மெல்லிய திருவடி வைத்து நடக்கின்றாளே, இத்திருவடி கல்லின் மீதுநடந்தால் வருந்துமே! என்று கூறி அரற்றுவது போல் இருந்தது. இடையில் உள்ள மேகலாபரணம் ஒலிப்பது மெல்லிய இடை வருந்துமே என்று கூறுவதுபோல் இருந்தது.

"கல்லுயர் பொருப்பினிடை காமரடி செல்ல
அல்லன கொல் என்றுமணி நூபுரம் அரற்ற
மெல்லிடை வருந்துமென மேகலை இரங்க
எல்லவரும் உள்மகிழ எம்மனை நடந்தாள்''

''இவ்வாறு அம்மை தேவகுஞ்சரி கல்லின் மீது பாத தாமரையை வைத்து நடந்தருளுவதில் என்ன ஆச்சரியம் உளது? எம்பிரான் கந்தவேள் தமது திருவடி மலரை அடியேனுடைய நெஞ்சமாகிய கருங்கல்லில் வைத்துஉலவுகின்றாரே! என்பர் கச்சியப்பர்.

"பஞ்சிதனின் மெல்லடிபனிப்பஉரை யின்பால்
குஞ்சரிந டந்தசெயல் கூறுபுது மைத்தோ?
செஞ்சுடர்வை வேலுடைய செம்மலடிதீயேன்
நெஞ்சகஅ டுக்கலினும் நின்றுலவும் என்றால்''.

முரசங்கள் முழுங்கின. தெய்வயானை அம்மையாரைத் திருமணப் பந்தலில் கண்ட முனிவர்கள் அனைவரும் 'தாயே வாழ்க' என்று துதித்தார்கள். தெய்வயானையம்மையார் பார்வதி, பரமேசுவரரைத் தொழுது நடுவேயுள்ள ஞானபண்டிதரைக் கண்டு நாணி நின்றார். உலக அன்னையாகிய உமாதேவியார் முருக வேளையும் தெய்வயானையம்மையாரையும் ஓர் உயர்ந்த ஆசனத்தில் இருத்தினார். திருவேலிறைவன் தெய்வயானையோடு திருமணக்கோலத்தில் வீற்றிருந்ததைக் கண்டு இந்திரனும் வானோரும் ஏனோரும் கைகூப்பி ஆனந்தக் கண்ணீர் பெய்து வந்தித்து வாழ்த்தினார்கள். இந்திராணி நாணம் மேலிட்டவளாய் திருமஞ்சன நீரைவார்க்க, இந்திரன் எந்தை கந்தவேள் திருவடிகளைப் பூசித்தான். மலர்களைச் சூட்டி தூப தீபங்களைப் பணித்தான். எம்பெருமானுக்குப் பூசனைகள் முடிந்ததும் இந்திரன் தெய்வயானை அம்மையாரது திருக்கரத்தை எம்பிரான் திருக்கரத்தில் வைத்து, ''எளியேனுடைய மகளை ஏற்றருள்வீர்'' என்று வேத மந்திரம் கூறித் தாரை வார்த்தான்.

''மருத்துவன் மாமறை மந்திர நீரால்
ஒருத்திபொரு ட்டினில ஒண்புனல் உய்ப்பக்
கரத்திடை ஏற்றன லைகழல் சேர்ந்தார்க்
கருத்திகொள் முத்தியும் ஆக்கமும் ஈவான்''.

தம் கரத்தில் இந்திரன் வார்த்த மந்திர நீரை முருகப் பெருமான் ஏற்றுக்கொண்டார். பிரமதேவர் மாங்கல்ய நாணை மனத்தினால் படைத்துக் கொடுத்தார். அதனை முருகப் பெருமான் தம் திருக் கரத்தினால் வாங்கிச் சுரகுஞ்சரியம்மையின் கழுத்தில் தரித்தார்; அம்மையாரின் கழுத்தில் ஒரு மலர்மாலையும்

சூட்டினார். கரும்பு, தேன், முக்கனிகள் முதலியவற்றையும் காமதேனுவின் பாலையும் இந்திரன் முருகக் கடவுளுக்கு நிவேதித்தான்.

திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற முருகப் பெருமானின் திருமணக்காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. தீ வலம் வருதல், அம்மிமிதித்தல், அருந்ததி காட்டுதல் முதலிய சடங்குகள் சிறப்புற நடந்தன. தேவாதி தேவன்., தேவராஜ குமாரியைமணந்த திவ்விய வைபவங்களை யாரே விரித்துரைக்க முடியும்?

திருமணச் சடங்குகள் யாவும் இனிதே முடிந்தன. முருகக் கடவுளும் தெய்வயானையும் பார்வதி-பரமேசுவரர்களையும் வலம் வந்து வணங்கினர். முருகனைச் சிவபெருமானும் மருமகள் தெய்வயானையைப் பார்வதி தேவியும் எடுத்து அணைத்து அருகில் அமரச் செய்து அருள் புரிந்தனர். ஆதிதம்பதியானசிவசக்தி இப்புது தம்பதிகளுக்கு முதன்மை ஸ்தானமும் அளித்து மகிழ்ந்தனர்.

''அடித்தலத்தில் வீழ மக்களை இருவரும்ஆர்வத்
தெடுத்தணைத்தருள் செய்துதம் பாங்கரில்
இருத்தி
முடித்தலத்தினில் உயிர்த்துமக் கெம்முறு
முதன்மை
கொடுத்தும்' என்றனர் உவகையால்
மிக்க கொள்கையினார்''.

முருகப் பெருமானையும் தெய்வயானையையும் வணங்கியவர்களுக்கெல்லாம் சிவபெருமானும் பார்வதி தேவியும் திருவருள் புரிந்து மறைந்தனர்.

பின்னர் முருகப் பெருமான் சிங்காதனத்தினில் வீற்று தரிசனம் தந்தார். அதன்பின் குழுமியிருந்தவர்கள் அனைவரும் அஞ்சலி செய்யவும் மங்கல வாத்தியங்கள் ஒலிக்கவும் தேவர் குழாங்கட்கு அருள்செய்து தெய்வயானை அம்மையாருடன் திருக்கோயிலுட் புகுந்தருளினார்.

இந்திரன் யாவருக்கும் காமதேனு, கற்பகம், சிந்தாமணிஇவைகளால் இன்னமுதூட்டி விடை கொடுத்தனுப்பினான். இந்திரன் நீண்ட காலம் விட்டு பிரிந்திருந்த இந்திராணியுடன் திருப்பரங்குன்றத்தில இல்வாழ்க்கைச் சுகம் எய்தினான்.

சுந்தமிகு முண்டகக் கண்ணனும் கருணைஎனும்
கண்ணனும் உடற்கண்ணனும்
கதிதனை வழங்கும்உன் திருமன்பு வந்துசெங்
கதிர்வேல் புகழ்ந்திரந்து
சுந்தரக் குங்குமக் கொங்கைஒரு மங்கை நம்
சுதையைவேட் டருகுகெனவே
சுடர்முடி துளக்கிவெகு மகிழ்வுடன் நகைத்தரு
சுரந்துளம் இசைந்துபுநநாள்
அந்தரத் தமரர்முசு குந்தன்முதல் இம்பர்கள்
அரந்தவர் பெருந்திசையினோர்
அணிமணக் கோலத்தில் அதிசயங் கண்டுய்ய
அப்பரங் குன்றின் மிசையே

தந்தியை மணந்த குவளைந்திரு மலைக் குமர
சப்பாணி கொட்டியருளே
தடக்கிரி பொடிப்பட அயிற்படை விதிர்த்தருக
சப்பாணி, கொட்டி யருளே

—திருமலை முருகன் பிள்ளைத் தமிழ்

[தொடரும்]

## இறைவழிபாட்டில் தேங்காய் உடைப்பதேன்?

தேங்காயின் புற ஓடு-மாயை
உள்ளே உள்ள வெண்ணிறகாய்-இறைவன்
தேங்காயின் இளநீர் - இறைவனின் திருவருள்
மாயையை அகற்றினால் இறைவனின் திருவருள் இன்பத்தில் திளைத்து இறைவனை அடையலாம் என்பது தேங்காய் உடைப்பதன் த்தத்துவமாகும்

## கற்பூர ஆரத்தியின் தத்துவம்

வெண்மையான கற்பூரம், சுத்த தத்துவ குணமுள்ள ஆன்மாவைச் குறிக்கும். கற்பூர சோதி, ஞானாக்கினியால் மலம் நீங்கப் பெற்ற ஆன்மா சிவகரணம் பெற்று நிற்பதைக் காட்டும். கற்பூரம் ஒன்றுமின்றி இறுதியில் கரைந்து போவதுபோல் ஜீவான்மா சரீரம் நீங்கி இறைவனோடு ஒன்றுபடும். இதுவேகற்பூர தீபாராதனையின் தத்துவமாகும்.

# கும்பகோணம் தீர்த்தங்கள்

கும்பகோணம் ஒரு சிறந்த பெரு நகரம் பட்டுமேயன்றி, மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்று சிறப்புக்களும் ஒருங்கே அமைந்த புண்ணிய ஷேத்திரமும் ஆகும். இங்குப்புகழ் பெற்ற பழமையான தீர்த்தங்கள் டதினான்கு உள்ளன.

1. மகா மகத் திர்த்தம்: இது நகருக்கு நடுவே 20 ஏக்கர் நிலப் பரப்'பில் ஆமைந்துள்ளது. இத்தீர்த்தத்தின் கரையில் நாற்றிசைகளிலும் 16 மண்டபங்களு டன் கூடிய சிறு கோயில்கள் அமைந்துள்ளன. அவற்றில் முறையே.

| | |
|---|---|
| 1. பிரம்மதீர்த்த ஈசுவரர் | 9. அகத்தீசுவரர் |
| 2. முகுந்த ஈசுவரர் | 10. வியாச ஈசுவரர் |
| 3. தன ஈசுவரர் | 11. உமா பாகேசுவரர் |
| 4. இடப ஈசுவரர் | 12. நிருதி ஈசுவரர் |
| 5. பாண ஈசுவரர் | 13. பிரம்மேசுவரர் |
| 6. கோண ஈசுவரர் | 14. கங்காதரேசுரர் |
| 7. பைரவ ஈசுவரர் | 15. முக்தி தீர்த்தேசுவரர் |
| 8. பக்திகேசுவரர் | 16. சேஷத்திரபாலேசுவரர் |

என்பவர்கள் எழுந்தருளியுள்ளனர். இத்தலத்திற்குப் பெருஞ் சிறப்டையும் புனிதத்தையும் உண்டாக்கிக் கொண்டு திகழ்வது மாமக தீர்த்தமாகும். இதற்குப் பாபநாச தீர்த்தம், கன்னி தீர்த்தம் எனப் பல பெயர்கள் உண்டு. கங்கை முதலிய புனிதநதிதேவதைகள் பலவும் மகாமக நாளில் இதன் கண் நீராடிப் புனிதம் பெறுகின்றன எனீபது வரலாறு.


குளத்தின் கிழச்குக் கரையில் நருமதையும் சரசுவதியும், தென்கிழக்கில் காவிரியும் தெற்கில்குமரியும், தென்மேற்கில் வேதவதியும், மேற்குக் கரையில் சரயு நதியும், வடமேற்கில் கங்கையும், வடகரையில் யமுனையும் வடகிழக்கில் கோதவரியும் ஆகிய 9 புனித நதிகள் அமைந்திருக்கின்றன. கங்கை நதிக்கு எதிரில் கும்பேசுவரர் வெள்விடையின் மீது பொன் மண்டபத்தில் எழுந்தருளியிருக்க, பிரம்மதேவரும், நீராடினார். ஆதலின் பிரம்ம தீர்த்தமும் இதன் வடகரையில் உள்ளது.

2. வருணதீர்த்தம்: வருண தேவன் அகழ்ந்தது. தூமகேது நீராடி வரம் பெற்றது.

3. பொற்றாமரைத் தீர்த்தம் : இது சாரங்கபாணி சுவாமி கோயிலில் உள்ளது. ஏம புஷ்கரணி எனவும் வழங்கும். 361 அடி நீளமும், 285 அடி அகலமும் உடையது. இலக்குமி தீர்த்தம், அமுதவாணி முதலிய பல பெயர்கள் இதற்கு உண்டு.



அருள்மிகு ஆதிகும்பேஸ்வரர் ஆலய இராஜகோபுரம்



மகாமகத் தீர்த்தத் திருக்குளம்

4. சந்திர தீர்த்தம்: வியாழ சோமேசர் கோயிலின் எதிரில் இருப்பது. சந்திரனால் அமைக்கப் பெற்றது.

5. கௌதம தீர்த்தம்: கௌதமேசுவரர் கோயிலுக்குப் பக்கத்தில் அமைந்திருப்பது. கௌதம முனிவர் நீராடிப் பேறு பெற்றது.

6. சூரிய தீர்த்தம்: சூரியன் நீராடி அருள் பெற்ற தலம். நாகேசுவரர் கோயிலில் தெற்குக் கோபுர வாயிலுக்கு எதிரில் உள்ளது.

7. வராக தீர்த்தம்: வராகப் பெருமான் கோயிலுக்கு அருகே கும்பேசர், திருமஞ்சன வீதியில் உள்ளது. இதன் கரையில் 'கரும்பாயிரம் கொண்ட விநாயகர்' கோயில் கொண்டுள்ளார்.

8. காசிப தீர்த்தம்: காசிப முனிவர் அருள் பெற்றது. இது காவிரியில் உள்ள ஒரு படித் துறை. இக்காலத்தில் 'கும்பேசர் திருமஞ்சனப் படித்துறை' என வழங்கி வருகின்றது.

9. சக்கர தீர்த்தம்: சலந்தரன் என்னும் அசுரனைக் கொன்ற சக்கரம் அசுரர்களாற் கவர்ந்து கொள்ளப்படாமல் இருப்பதற்காகக் காவிரியாற்றில் பாதுகாப்பாக மறைத்து வைக்கப் பெற்றிருந்த இடம். இறந்தவர்களின் என்பை இங்கு கொணர்ந்து விடுதல் ஒரு சிறப்பாகக் கருதப்பெறுகின்றது.

10. பகவத் தீர்த்தம்: பகவன் என்னும் அந்தணன் கங்கையில் இடுவதற்காக கொண்டு சென்ற என்பு, காவிரியாற்றில் இவ்விடத்தில் பூவாக மாறியது என்பது வரலாறு.

11. மதங்க தீர்த்தம்: காவிரிப் புதுப் பாலத்தின் அருகில் உள்ள ஒரு படித்துறை. மதங்க முனிவர் நீராடி அருள் பெற்றது.

12. மங்கள கூபம்: கும்பேசர் கோயிலுக்கு வடகிழக்கே, முருகப் பெருமானின் பொருட்டு, மங்களாம்பிகை தனது நகத்தால் உண்டாக்கிய கிணறு இப்போது திருக்குளமாக மாற்றி அமைக்கப்பட்டு விளங்குகின்றது.

13. குர தீர்த்தம்: கும்பேசர் கோயிலின் மங்களாம்பிகையின் சந்நிதிக்கும் எதிரேயுள்ள கிணறு, காமதேனுவின் குளம்பால் உண்டாக்கப்பட்ட தீர்த்தம். (குரம்-குளம்பு) இதன் கரையில் வெள்ளைப் பிள்ளையார் கோயில் உள்ளது.

14. அசுவத் தீர்த்தம்: நாகேசுவரர் கோயிலில் உள்ளது. ஆதிசேடன் நீராடி அருள் பெற்றதால், நாக தீர்த்தம் எனவும் வழங்கும். (சிங்கக் கிணறு)

இத்தகைய தீர்த்தப் பெருஞ் சிறப்புக்களை உடைய கும்பகோணத் தலத்தினை மகாமக விழாவினை ஒட்டி, 50 லட்சம் பக்தர்கள் சென்று கண்டு தீர்த்தமாடிப் போற்றிப் பெரும் பேறு பெற்றனர்.

# வல்லக்கோட்டைக்கு வாருங்கள்!
# வள்ளி மணாளனைப் பாருங்கள்!!

வல்லக்கோட்டை முருகன் அடிமை M. V. ரங்கநாதன்

வல்லக்கோட்டைஎன வழங்கும் 'கோடை நகர்' திருபெரும்புதூரிலிருந்து திருபெரும் பூதூர்-செங்கல்பட்டு மார்க்கத்தில் 10 கிலோ மீட்டர் தூரத்திலுள்ளது.

இந்த வல்லக்கோட்டையில் கந்தவேள் 'கோடையாண்டவர்' என்னும்திருநாமத்துடன் கம்பீரமாகவும், மிகவும் உயரமாகவும் 7 அடி உயரத்தில் தன்னுடைய .தேவிமார்களுடன் அழகாகக் காட்சி தருகிறார்.

இந்தத் தலத்திற்கு புராண வரலாறு உண்டு. முன் காலத்தில் இலஞ்சி என்னும் தேசத்தில் சலங்கொண்டபுரம் என்னும் நகரை பகீரதன் என்னும் மன்னன் ஆண்டு வந்தான். எல்லா வகையிலும் தன்னிகரற்று விளங்கியிருந் தாலும் தான் என்னும் அகந்தையும், தன்னை யாரும் வெல்ல முடியாது. என்ற இறுமாப்பும் கொண்டிருந்தான். அவனைக் காண வந்த நாரதமுனிவரையும் மதியாது பாரமுகமாக நடந்து கொண்டான். அவன் ஆணவத்தை அடக்கி, புத்தி புகட்ட எண்ணிய நாரதர் அவ் வமயம் திக்விஜயம் செய்து வந்த கோரன் என் னும் அசுரனிடம், எல்லாவகையிலும் சிறந்த பகீரதன் என்னும் மன்னனை வென்றால்தான் அவனுடைய திக்விஜயம் பூர்த்தியாகும் எனக் கூறினார். அசுரன் கோரன் பகீரதனுக்கு சவால் விட்டு கடுமையான போர்நடத்தினான். போரில் அசுரன் கோரன் வெற்றி கொண்டான். தோல் வியுற்ற பகீரதன் நாடு, நலமிழந்து திரிந்து துருவாச முனிவரின் உபதேசப்படி சுக்கிரவாரம் விரதம் இருந்து, பாதிரி விருட்சத்தின் கீழ் முருகப் பெருமானைப் குறித்து கடும் தவம் புரிந்து அதில் சித்தி பெற்று முருகனுக்கு பெரும் ஆலயம் அமைத்து பூஜை வழிபாடுகள் செய்து அவரின் பேரருளால் அழியாப் பேறு பெற்றான். அந்த பகீரத மாமன்னன் அமைத்த ஆலயமே வல்லக்கோட்டை முருகன் ஆலயம் என்பதாகும்.

இவ்வாலயத்தின் முன் புறத்தில் நீர் வற் றாத தாமரைத் தடாகம் ஒன்று உள்ளது. இந்த தடாகத்திற்கும் வரலாறு ஒன்று உண்டு. முன்னொரு காலத்தில் இந்திரன் தனது குரு வாகிய பிரகஸ்பதியை நாடி முருகனை வழி படுவதற்கு உத்தமமான தலமொன்றைக் கூற வேண்ட பிரகஸ்பதியும் 'வல்லக்கோட்டை' எனும் தலமே மேலான தலமென கூற, இந் திரன் அத்தலத்திற்குச் சென்று தனது வச் சிராயுதத்தை அழுத்தி .வச்சிர தீர்த்தம்' உண்டு பண்ணி அத் தீர்த்தத்தால் முருகனை அபிஷேகித்து, வணங்கி இஷ்ட சித்தி பெற்ற னன் என்பதாகும்.

மற்றும் ஓர் சிறப்பு இவ்வாலயத்துக்கு உண்டு. ஆறுபடை வீடுகளில் வீற்றிருக்கும் கந்தவேளைப்பற்றி பாடிய தெய்வக்கவி அருண கிரிநாதரின் கனவிலே முருகன் தோன்றி 'வல் லக்கோட்டைக்கு வர மறந்தனையோ' என வினவ அருணகிரிநாதர் தம் திருப்புகழில் எட்டுப்பாடல்களை வல்லக்கோட்டை முருகன் மேல்பாடி வழிபட்டிருக்கிறார்.

இவ்வளவு சிறப்பு மிக்க ஆலயம் நாளடை வில் சிதலமடைந்து கவனிப்பாரற்று, தினசரி வழிபாடும் இல்லாமல் இருந்து வந்தது. அவ் வூர் மக்களும், சுற்றுப்புறத்திலுள்ள ஒரிரு கிராம மக்கள் மாத்திரம் விசேஷ தினங்களில் மட்டும் வழிபட்டு ஆராதனை நடத்தி வந்த னர். அந்நிலை மாறி இன்று அக்கோயிலின் சிறப்பு பல நகரங்களிலும் பல ஊர்களிலும் பரவி தினமும் மூன்று கால பூசைகளும் விசேஷ தினங்களில் சிறப்பான அபிஷேகமும், அலங் காரமும் திருவிழாக்களும் நடைபெற்று வரு கின்றது. அதற்கு காரணம் அக்கிராம மக்க ளின் ஆதரவுடன் சென்னையிலிருந்து இயங்கும் தெய்வீக சத்திய தர்மஸ்தாபனமும் எடுத்துக் கொண்ட முயற்சியாகும்.

தவத்திரு குருஜி சுந்தரராம் ஸ்வாமிகள் நல்லாசிகளுடன் துவக்கப்பட்ட தெய்வீக சத்ய தர்மஸ்தாபனம் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள், தேவி உபாசகர் இராமதாஸ் சுவாமிகள், சைவத்திரு காளிகாம்பாள் சாம்பமூர்த்தி சிவாச்சாரியார் மற்றும் ஆன்மீகப் பெரியோர்களின் ஆசியாலும், தெய்வ சிந்தனை கொண்ட தனவந்தர்களின் உதவியாலும் கோடையாண்

டவர் வளாகத்தில் கணபதி ஆலயம் மற்றும் திரிபுர சுந்தரி கருமாரி அம்மன் ஆலயம் நிர்மாணித்தும், மயில் கூடு கட்டியும், கோயிலைச் சுற்றி மதில் சுவர் எழுப்பியும், பக்தர்கள் அமர்ந்து தியானம் செய்ய கோயிலின் முன்புறத்தில் சிமெண்ட் பலகையில் வேய்ந்த பெரிய கூடமும் கட்டி சேவை செய்துள்ளது. தற்பொழுது மூலவர் கோயிலுக்கு விமான கட்டுமான வேலையும், கருங்கற்களினாலான உட்பிரகாரச் சுவர் எழுப்பும் வேலையையும் இந்த ஸ்தாபனச செலவில் வேலை நடைபெற்றுக் கொண்டு வருகிறது. மற்றும் வரும் பக்தர்களுக்கு குடி தண்ணீர் வசதியும், ஞாயிறு, கிருத்திகை, விசாகம் மற்றும் விசேஷ தினங்களில்சிவன் கோயிலின் அருகாமையிலுள்ள அன்னதானக் குடிலில் அன்னதானமும் சிறப்புடன் செய்து கொண்டு வருகிறது.

இந்த தலத்தில் இருக்கும் கோடையாண்டவர் வரும் பக்தர்களுக்கு அவர்கள் வேண்டும் வரங்களை எல்லாம் தந்து அருள் வழங்கிக் கொண்டிருக்கின்றார். கோடையாண்டவரைத் தரிசித்து வாழ்வில் வளம் பெற்றவர் ஏராளம்.

அன்பர்கள் தங்கள் குடும்பத்துடனும், நண்பர்களுடனும் வல்லக்கோட்டைக்கு வந்து வச்சிர தீர்த்தத்தில் மூழ்கி, ஆறெழுத்தை ஓதி வள்ளி மணாளனைத் தரிசித்து தங்களது வினையெல்லாம் போக்கி அவன் அருளாசியைப் பெறுங்கள்.

வல்லக்கோட்டை அருள்மிகு கோடையாண்டவர் ஆலயம் அண்மைக் காலத்தில் மிக பிரபலம் அடைந்து டல்லாயிரக்கணக்கான மக்கள் நாள்தோறும் தேடி வந்துவணங்கும் பிரார்த்தனைத் தலமாகத் திகழ்ந்து வருகிறது. வல்லக்கோட்டை முருகன் திருவருளைப் பெற்று டயன் அடைந்த டல்லாயிரக்கணக்கான மச்கள், டெருகும் பக்தி உணர்வோடு வாரா வாரமும், கிருத்திகை தோறும் அருள்மிகு கோடையாண்டவரை தரிசிக்க வந்த வண்ணம் உள்ளார்கள். நீங்களும் வாருங்கள், வந்து அருள்மிகு கோடையாண்டவரின் திருவருளை அள்ளிப் பருகுங்கள்.

வல்லக் கோட்டைக்கு வாருங்கள்

வள்ளி மணாளனைப் பாருங்கள்.

உள்ள கேட்டினைநீக்கிடுவான்

உயர்ந்த வீட்டினை ஆக்கிடுவான்.



மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்தில் நடைபெற்ற அறிஞா அண்ணா சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திருமிகு எம். ஆனந்தன் அவர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள். ஆலய நிர்வாக அதிகாரியும் துணை ஆணையாளருமான திரு. கு. சிதம்பரம், பி.ஏ. அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.

# கடவுளை அறியும் அறிவே ஞானம்

ஞானச்சேரி ஞானிகள், வேளச்சேரி ஆசிரமம், வேளச்சேரி.

கொள்கை என்றால் நிறைவேற்றுவது. நிறைவேறியதை நினைக்கும்பொழுது மனிதனின் மனம் நிறைவு பெறும். இதனால் நிறைவேறிய செயல், செய்கை இவைகளுக்கு எல்லாம் கொள்கை என்று பெயர் வந்தது. இது எப்படி உங்களுக்குத் தெரியும் என்று கேட்காதீர்கள். அறியாமை நீங்கினால் அறிவு வரும். பிறகே எதற்கும் விடை காண முடியும். இவ்விடைகளை கடவுளை வைத்துப் பெற்றுவிடு. பெற்றுவிட்டால் எது அறியாமை என்பது புரியும்.

ஞானத்திற்கு எதிரியாகஉள்ளது அஞ்ஞானம். இது தெரியாதா சீடனே.. என்றார் குரு. இப்படிப்பட்ட ஒரு குரு அல்லது ஒரு தெய்வம்என்று எண்ணத் துவங்குங்கள். அதுவே நல்வாழ்க்கை. அதுவே தெய்வீகம். எதுஎப்படி இருந்தாலும் அறிவைத் தெரிந்து கொள்வதே கடவுள். அறிவைத் தெரிந்து கொள்வதே ஞானம் தெளிவு என்ற அனைத்துமாம்..என்பதை உணருங்கள். அறிவைத் தெரிந்து கொள்ளும் முன் அறியாமையைத் தெரிந்து கொள்வது நலம். எது அறியாமை என்பதை மனிதன் புரிந்து கொண்டால் அதுவே மனிதனுக்கு ஏற்றம், பெருமை. இதற்காக நான் கடவுளையும் நாடினேன். புத்தியையும் நாடினேன். அறியாமையைப் பற்றிய அறிக்கையைத் தெரிந்து கொள்ளுங்கள்.

ஒரு மரத்தடி குருவினிடம் ஒரு சீடன் தனது உண்மை அறிவிற்காக அடிமையானான். இத்தகைய கொத்தடிமையைக் குருவிற்கு பிடித்திருந்தது. குரு சொன்னதைக் கேளுங்கள். சீடன் அறிந்ததை உணருங்கள். ''சீடனே, நானொருவனை சந்தித்தேன். அவனுக்கு வயிறு இல்லை. மற்றதெல்லாம் இருந்தது என்றார். இது எப்படி குருவே? வயிறு இல்லாமல் எப்படி இருக்க முடியும்? எப்படி வாழ முடியும் என்றான் சீடன்; சீடனே நீ இப்பொழுது பதட்டப்படுவதே அறிவு. பதட்டப்படாமல் இருந்திருந்தால் அதுவே அறியாமை. இவ்வுணர்வை மக்கள் அடையவேண்டும். அடைந்தால் கடவுள் துறையை ஒரளவு உணரலாம். சுவைக்கலாம்.

இங்கு என் முன் உரையாடிக் கொண்டிருக்கும் சீடனைப் போன்ற மக்கள் உலகில் இருந்தால் அவர்கள் கருத்தினுள் வைத்து கவனிக்கவும். ஒரு மனிதனுக்கு வயிறு இல்லை. என்றால் தனது வயிற்றினால் உணவு பொருள்களை ஜீரணிக்க முடியவில்லை என்று பொருள். அதுபோல இன்றைய நாட்டுமக்கள் அல்லது உலகமக்கள் ஆண்டவனைக் காணாமல் இருக்கலாம். ஆண்டவனும் வலிய வந்து தரிசனம் கொடுக்காமல் இருக்கலாம். இது தவறில்லை. சமைத்த உணவு நம்மை தேடியா வரும்? தேடி வராது. சமைத்ததை நாமே எடுத்து உண்ணத்தான் வேண்டும். இது போல அறிவும் அறிவுள்ள மனிதனும் அறியாமையை அழிக்கும் ஆண்டவனைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இங்கு இப்பொழுது ஒரு கருத்தை உணருங்கள். கடவுளுக்கு உலகில் ஒரு கொள்கை உண்டு. அது எது? அதுவே அழிவுக்கொள்கை. அதுவே மனிதனின் அறியாமையை அழிக்கும் கொள்கை. ஆண்டவனின் இச்செய்கையே இன்றைய ஒவ்வொரு மனிதனின் தனித்தனி அறியாமை. இதை அறிய வேண்டும். இச்செய்கையை மனிதர்கள் செய்யவேண்டும். இதுவே என் விருப்பம். இதைச் செய்கின்ற வயிறுள்ள மனிதர்களும் இருக்கிறார்கள். வயிறு இல்லாத மனிதர்களும் இருக்கிறார்கள்'' என்றார் குரு. வயிறு உள்ள சீடன் குலுங்கச் சிரித்தான்.

இதுவரை தெளிவு தந்த குருவையே சுற்றிக்கொண்டிருந்த சீடன் குருவை விட்டு விலகினான். தன்னால் கடவுளை உணரமுடியும் என்பதை உணர்ந்தான். தனக்கு வயிறு இருக்கிறது என்பதை உணர்ந்தான்... என்பதையே நான் இப்படிச் சொன்னேன். வயிறு என்ற உறுப்பை உணர்ந்தவன் பசியை உணர்வான். பசிக்கு உணவு உட்கொள்வான். ஜீரணத்தையும் பெறுவான். அஜீரணம் என்று சொன்னால் அப்பொருளைத் தள்ளிவிடுவான். உண்ணமாட்டான். இக்கருத்தை ஓடிவந்து குருவினிடம் சொல்லி விடுவான்.

இப்படியா கடவுளை ஜீரணிக்க முடியாமல் தவிக்கிறாய்? முடியவில்லை என்று சொன்னால் முடியாமைமனிதனிடமா? அல்லது தெய்வத்தினிடமா? முடியவில்லை என்று சொன்னால் முடியாமை மனிதனிடமா? அல்லது தெய்வத்தினிடமா என்று பார்க்க வேண்டும். இதுவே கொள்கை. இதன் பெயரே கொள்கை என்று சொன்னார் குருநாதர். மனிதர்கள் அனைவரும் எதையும் அறிகின்ற அறிவு உள்ள


வர்கள், அதனால் அவர்கள் மனிதனுக்கு வயிறே இல்லையா? அல்லது இருக்கிறது. ஆனால் கடவுளை அறிய முடியவில்லை, இதுவே காரணம் என்றாவது சொல்ல வேண்டும் என்றார் குரு. இதுவுமில்லை என்றால் கடவுள் என்ற பொருளே கடினம். அதை எவராலும் ஜீரணிக்க முடியாது என்று சொல்ல வேண்டும்.

இதைச் சொன்னவுடன் சீடன் மன அமைதி கொண்டான். சமுதாய மக்களுக்காக தான் கேட்ட கேள்வி சரி, அதற்குத் தகுந்த விடை கிடைத்துவிட்டது என்பதை அறிந்தான். இக் கருத்தை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். உலகில் அறியாமை என்பது உலகில் இல்லை. மனிதனிடமே இருக்கிறது. அந்த அறியாமை கூட எது தெரியுமா? கடவுளை அறிந்து கொள்ள முடியாத நிலை இருக்கிறதே அதுவே. அறியாமையாகும். அதையே மனிதன் போக்கிக் கொள்ளவேண்டும். போக்கிக்கொண்டால். அனைவரும் பெரியவர்கள் ஆகிவிடுவார்கள், முழுமையும் அருளும் பெற்றுவிடுவார்கள். இதுவே எளியவனின் விருப்பம்.

உலகில் கல்வித்துறையில் நமக்கு அறிவு எவ்வளவு இருக்கிறதோ அதுவே அறிவு. எவ்வளவு அறிவு இல்லையோ அதுவே அறியாமை. இதற்கு உலக அறியாமை என்று பொருள், இந்தஅறியாமையை போக்கிக் கொண்டால் கடவுளை அறியாத நிலை என்ற அறியாமை பொதுவானது. இதை அழிக்கும் தன்மை இறைவனிடமே உள்ளது. அத்தொழிலை அறியுங்கள்.

அறியாமையைப் போக்கிக் கொள்ளுங்கள். கடவுள் வருவான். இதுவே கடவுளை அறியும் ஞானம்!

**ஞானச்சேரி ஞானிகள்,**
வேளச்சேரி ஆசிரமம்



**திருவேற்காடு. அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில், கடந்த 3 2-92 திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில், இத்திருக்கோயிலின் தேவி உபாசகர் அருட்செல்வர், தவத்திரு சுவாமி இராமதாசர் அவர்கள் முன்னிலையில், வட சென்னை பாராளுமன்ற உறுப்பினர் திருமிகு தா. பாண்டியன், எம்.ஏ., பி எல் , எம்.பி.. அவர்கள் தலைமையில் அறிஞர் அண்ணா நினைவு நாள் சிறபபு வழிபாடும், பொதுவிருந்தும் சிறப்பாக நடைபெற்றது. பொது விருந்து ஏற்பாடுகளை, திருக்கோயிலின் துணை ஆணையர் - நிர்வாக அதிகாரி திரு வே. முனியசாமி, எம்.ஏ., பி.எல்., அவர்கள் சிறப்பாக செய்திருந்தார்.**



சித்திர பாரதம்
க.வ: செவ்வேள்
ப: MNRAJA
தருமர் திரௌபதியிடம் விசாவுகிறார்.
வீமன் எங்கே! சிலநாட்களாகவே வீமன் என் கண்களில் தென்படவில்லை? அவன் எங்கு எதற்காகச் சென்றிருக்கிறான் என்பது உனக்காவது தெரியுமா?
ஆகாயத்திலிருந்து ஒருநாள் அழகிய பொற்றாமரை மலர் ஒன்று வந்து விழுந்தது.
அம்மலர் வேண்டும் என்று கேட்டேன். மலரைத் தேடி குபேரபுரி சென்றவர் இன்னும் வரத் தாணோம்
இதைக் ஏன் எனக்கு முன்னமே நீ கூறவில்லை? குபேரபுரியில் வீமனுக்கு என்ன நேர்ந்ததோ தெரியவில்லையே
தருமர் பதற்றத்துடன் துடித்தவராய், கடோற்கஜனை நினைக்க, அவனும் உடன் தோன்றுகிறான்.
பெரிய தந்தையே! தண்டனிடுகிறேன்! என்னை அழைத்த காரணம் என்ன?
குபேரபுரி போக வேண்டும் என்னுடன் நீயும் வா
கடோற்கஜன் பறக்கும் தேரை வரவழைக்க அதில் ஏறிப்புறப்படுகிறார்கள்
அரக்கர் கூட்டம் மடிந்து கிடக்க, குபேர சோலையில் இளைப்பாறிக் கொண்டிருக்கும் வீமனைக் கண்டதும்தான் தருமரின் கவலை தீருகிறது.
அண்ணா! நான் சுகமாகவே இருக்கிறேன் இதோ பாருங்கள்! குபேரன் எனக்கு அளித்த மலர்கள்.


கடோற்கஜனும் தன் தந்தை வீமனைக் கட்டித்தழுவிக் கொண்டு மகிழ, மூவரும் பறக்கும் தேர் ஏறிப் பூவுலகம் வந்து சேருகிறார்கள். கடோற்கஜன் விடைபெற்று இடும்பவனம் போக, பாண்டவர்களும் தம் ஜாகையை அருகிலிருக்கும் வனத்திற்கு மாற்றிக் கொண்டு விடுகிறார்கள்
அவ்வனத்தில் வாழும் முனிவர்கள் தருமருக்குத் தங்கள் நல்லாசிகளை வழங்குகிறார்கள்
கொடிய வன விலங்குகளின் தொல்லை இங்கு மிகுதி. அதைப் போக்கிடல் நன்று
வீமா நீ போய் முனிசிரேட்டர்தம் குறை தீர்த்து வா!
யானை, புலி, சிங்கம், கரடி முதலான கொடிய வன விலங்குகளை வேட்டையாடி அழிக்கிறான் வீமன்
அதே நேரம் அவ்வனத்தில் வாழும் சடாசுரன் எனும் கொடிய அரக்கன், திரௌபதியைத் தூக்கிக் கொண்டு வானில் பறக்கிறான்.
காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்.
நகுல சகாதேவர்கள் அரக்கனை வழி மறித்து அம்புகளைத் தொடுக்கிறார்கள். வீமன் திரௌபதியின் அபயக்குரல் கேட்டு அங்கு விரைந்து வருகின்றான்.
நீண்ட கிளைகளையுடைய ஒரு ஆச்சா மரத்தைப் பறித்து வீமன் வீச, அதன் அடிபட்டுத் துடிக்கும் அரக்கன் திரௌபதியைக் கீழே விட்டு, பெரியமலை ஒன்றைப் பறித்து வீமன் மேல் வீசுகிறான்.
கதாயுதத்தை வீசி மலையைப் பொடியாக்கும் வீமன், சடாசுரனின் வளைந்த இரு கோரப் பற்களைப் பிடித்து, கரகரவெனச் சுழற்றி வீசுகிறான்.
ஆ... செத்தேன்!!

# கரும்பாயிரம் கேட்ட விநாயகர்!

பிரசங்க பரிமளம் ஜெயஸ்ரீ மூகாம்பிகை

*[வராகத் தீர்த்தக் கரையில் கோயில் கொண்டுள்ள கரும்பாயிரம் கொண்ட விநாயகர் வரலாறு பற்றிய கதை இது].*

கும்பகோணம் அன்று, திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. செய்த பாவங்களைக் கழிக்க எண்ணி வரும் ஒரு சாரார், வருங்காலத்திற்குப் புண்ணியத்தைச் சேர்க்க எண்ணி வரும் ஒரு சாரார், ஆண்டவனைத் தரிசித்துவிட்டால அனுபவிக்கும் கஷ்டங்களிலிருந்து விடுபட்டுவிடலாம் என்று ஆசையாக வரும் ஒரு சாரார், பரமனைக் காண்பதிலேயே ஆனந்தம் கொள்ளும் ஒரு சாரார் என அலைகடலெனும் கூட்டம் அன்று அப்புண்ணியத் தலத்தை நிறைத்திருந்தது.

ஆண்டவனைக் காணும் ஆசையின்றி, கைப்பொருள் தேடும் வியாபாரிகளுக்கும் அது ஆனந்தமளிக்கும் நாள். திரண்ட கூட்டத்திற்கு மோர், திண்பண்டங்கள் விற்று பல நாள் இலாபத்தை ஒரே நாளில் திரட்டிவிடும் வாய்ப்பு இருப்பதால் அவர்களும் இத்திருநாளை ஆவலோடு எதிர்ப்பார்ப்பார்கள்.

இன்று மாகமகம் காணும் கும்பகோணத்தில் முன்னொரு நாள் முக்கண்ணரின் திருமகனாம் விநாயகப் பெருமான் நிகழ்த்திய திருவிளையாடல் இது.

வியாபாரி ஒருவன் மிகுந்த உற்சாகத்தோடு காளை மாட்டு வண்டி ஓட்டிக் கொண்டிருந்தான். அவன் சாட்டையடியில் காளை மாடுகள் வேகங்கண்டன. 'சாரங்கா' என்றான் பாதையில் கவனம் வைத்தபடியே. பக்கத்தில் அரைத் தூக்கத்தில் இருந்த சாரங்கன் தலையைச் சிலிர்த்துக் கொண்டு நோக்கினான். பலவந்தமாகத் தூக்கத்தை விரட்டியடித்தவனாக நிமிர்ந்து அமர்ந்தான். 'என்ன'

''சாரங்கா, இந்த மாதிரித் திருவிழாக்கள் வருடத்தில் குறைந்தது 300 நாளாவது இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்''.

வாய்விட்டு சிரித்தான் சாரங்கன். தூக்கம் பூரணமாக விலகிவிட்டது. அர்த்தத்தோடு பின்புறம் பார்வையை ஓட்டினான். வண்டி முழுவதும் அழகாக அடுக்கப்பட்டிருந்த கரும்புகள், விரைவில் வண்டியின் கரும்பு பாரத்தை குறைத்துப் பையில் பணபாரத்தை ஏற்றிக் கொள்ள வந்திருக்கும் வியாபாரியின் ஆசையை புரியவைத்தது.

''என்ன சிரிக்கிறாய்''? என்றான் வியாபாரி,

''ஊம், ஒன்றுமிலலை. உங்க கருத்து கேட்க நன்றாக இருக்கிறது. ஆனால் இது சாத்திய மில்லையே''?

''பரவாயில்லை. இன்றைக்கே இவ்வளவு கரும்புகளையும் விற்று - அதுவும் நல்ல விலைக்கு விற்று நிறைய சம்பாதித்து விடுவேன். நீதான் என் சாமர்த்தியத்தைப் பார்க்கப் போகிறாயே'' என்று பெருமிதத்துடன் கூறியபடியே வண்டியை இழுத்துக் கீழே குதித்தான்.

சாரங்கனும் கீழே இறங்கினான். எதிரே நோக்கியவன் பக்திப் பரவசனாகி அப்படியே நெடுஞ்சாண் கிடையாகக் கீழே விழுந்துவணங்கினான். எழுந்து தோப்புக்கரணம் போட்டான். வியாபாரி பார்த்தான். எதிரே சிறிய விநாயகர் கோயில் ஒன்று இருந்தது. ''சரி, சரி, உடம்பு சுளுக்கிக் கொள்ளப் போகிறது. வா, நேரமாகிறது. வியாபாரத்தைக் கவனிப்போம்''! என்றான்.

முழுமுதற் கடவுளை வணங்காமல் வியாபாரத்தைக் கவனிப்பதா? எந்தக் காரியத்தையும் விக்னமில்லாமல் நிறைவேற்றும் விநாயகப் பெருமானே முன்னின்று அருள் பாலிப்பது போல காட்சியளிக்கிறார். அவரை வணங்கி முதற் கரும்பை அவரது திருப்பாதத்தில் சமர்ப்பணம் செய். மற்ற கரும்புகள் அனைத்தும் விரைந்து விநாயகரின் அருளால் விற்றுப் போவதைக் காண்பாய்.

ஏதோ பெரும் ஹாஸ்யத்தைக் கேட்டது போல் சிரித்தான வியாபாரி. ''நான் என் வியாபாரத் திறமையைக் காட்டாமல் வாய் மூடிக்கொண்டிருந்தால் உன் வராக விநாயகர் விற்றுக் கொடுத்துவிடுவாரோ? சொந்த தலையைக்காப்பாற்றிக் கொள்ள வக்கில்லாத கடவுள். இவரை நம்பி இப்படி விழுந்து வணங்குவதற்கு உன்னைப போன்ற பத்தாம் பசலிகள் போதும். உங்களை வைத்து வியாபாரம் செய்து வாழ்வதற்குத்தான் என்னைப் போன்றத் திறமை சாலிகள் இருக்கின்றோம்.

''சிவ, சிவ'' என்று காதுகளைப் பொத்திக்கொண்டான் சாரங்கன். அதையும் மீறிக் கொண்டு ஐயா, ஐயா. என்ற குரல் கேட்டது குனிந்து நோக்கினான். ஒரு அந்தணச் சிறுவன் வியாபாரியின் முகத்தை ஏறிட்டு நோக்கி அழைத்துக் கொண்டிருந்தான். கறுப்பு நிறம், இடையைச் சுற்றியிருந்த எளிய ஆடை, முகத்தில் ஒரு ஒளி.

இனம் புரியாத ஒரு பரவசம் சாரங்கனின் நெஞ்சை நிறைத்தது. கையெடுத்து அச்சிறுவனை வணங்க வேண்டும் போல் தோன்றியது. அன்று மகாபலியின் சபைக்கு வந்த வாமனரே இங்கு வந்திருக்கிறாரோ, அல்லது வேழ



முகத்தானே இவ்வடிவு கொண்டு வந்து விட்டாரோ என்று உள்ளம் சிலிர்த்தது.

ஏற்கனவே, சாரங்கன் விழுந்து விழுந்து வணங்கிக் கொண்டிருப்டதால் நேரம்வீணாகிக் கொண்டிருக்கிறதே என்ற எரிச்சலில் இருந்த வியாபாரி என்ன வேண்டும்? என்று சிறுவனை நோக்கிச் சிடுசிடுத்தான். சிறுவன் கரும்பை ஆசையோடு பார்த்தப்படியே ''எனக்கு ஒரே ஒரு கரும்டைத் தாருங்கள்!'' என்றான்.

''எவ்வளவு பணம் வைத்திருக்கிறாய்?',

''பணமா?''

''ஏன் டணமிலலையா?, நீ அனாதையா?.''

''உண்மைதான், என்னை அனாதி என்று அறிந்தவர்கள் அழைப்பார்கள். ஆனால் நான் அனாதையல்ல. என் தந்தையே சாப்பாட்டுக்கு இல்லாமல்யாசகம் பெற்று சாப்பிடுபவர்தான்.

''மூதன் முதலில் நல்ல கிராக்கி வந்தது. போ, போ தரித்திரம்'' என்று வியாபாரி எரிந்து விழுந்தான்.

இதற்குள் சாரங்கன் சிறுவனை நோக்கிக் குனிந்து கனிவு ததும்ப அப்பா, குழந்தாய் உன் பெயரென்ன? என்றான். 'கணேசன்' ''ஆஹா என் ஐயனின் திருநாமம்'' என்றபடியே பக்தியோடு கன்னத்தில் .போட்டுக் கொண்டான்.

'ஏனுங்க, இந்தக் குழந்தையிடம் ஒரு கரும்பைக் கொடுங்க'!

''அதெல்லாம் முடியாது-மூர்க்கமாக மறுத்தான் வியாபாரி. வியாடாரத்தில் மூதன் முதலில் டணமில்லாமல் கொடுப்டதாவது.

''ஏனுங்க' நான் இறங்கும் போதே முதற் கரும்பை இங்கெழுந்தருளியுள்ள வராக வினாயகருக்கு காணிக்கையாக்க சொன்வேன். அவரே உருக் கொண்டு வந்தாற்போல் இச்சிறுவன் வந்து கைநீட்டிக் கேட்கிறான்'' கரும்பைக் கொடுங்க.''

''இடதா பார், நான் சொன்னால் சொன்னதுதான். உன் வராக விநாயகருக்கும் கரும்பைத் தரமாட்டேடன். இந்தப் பரதேசிப் பயலுக்கும கரும்பைத் தரமாட்டேன்''.

''பார்ப்போபா,நான் இந்தச் கரும்பைச் சாப்பிட்டுக் காட்டுகிறேன். ஒன்றலல, ஆயிரம் கரும்பையும்'' என்றபடியே சிறுவன் கரும்பை எடுக்க நெருங்கினான். ''தொட்டால் கையை ஒடித்துவிடுவேன்' என்று சீறியபடி சிறுவனைப் பிடிக்கப் பாய்ந்தான் வியாபாரி. சிறுவன் பிடிக்குச் சிக்காமல் ஓடினான். வண்டியின் பின்புறம் போய் கரும்பின் தோகைப் பக்கம் கை வைத்தான். வியாபாரி கூச்சலிட்டபடியே பிடிக்கப்பபாய்ந்தான். சிறுவனும் வியாடாரியுமாக வண்டியைச் சுற்றிச் சுற்றி வந்கதார்ள்.

வழியோடு போகும் மக்கள் இக்கூத்தை நின்று வேடிக்கைப் பார்க்க ஆரம்பித்தார்கள்.

சிறுவன் மிகவும் களைத்துப் போனான். வியாபாரி பிடித்து விட்டான். அப்பிடியிலிருந்தும் நழுவியயோடி கோவிலுக்குள் நுழைந்து விட்டான் சிறுவன். அடுத்த நிமிடம் மக்களின் ஆச்சரியக் குரல் எழுந்தது. ''இங்கே பார்'' திரும்பி வண்டியைப் பார்த்தான் வியாபாரி; உறைந்து போனான். பாச்குபரம் போன்று பருத்துப் பளபளத்துக் கொண்டிருந்த ஒவ்வொரு கருபபும் சாறு நீங்கிய சக்கையாகி துவண்டு போயிருந்தது.

ஒரு கணத்தில் அறிவில் பொறிதட்ட 'ஐயனே' என்று அலறியபடி கோவிலுக்குள் பாய்ந்து சிறுவனைத் தேடினான் வியாபாரி. சிரித்து அருள் பாவித்துக் கொண்டிருந்த வேழமுகத்தான் விக்ரகம் தவிர்த்து அங்கு ஒருவருமில்லை. கூட்டமும் திகைத்தது. நடந்ததை ஜீரணிக்க முடியாமல் வாயடைத்துப்போனான் வியாபாரி. சிறுவனாகி வந்து, தன் சீற்றத்திற்கு ஆளானது வினாயகப் பெருமானா? கண்கள் ஆறாகப் பெருக அப்படியே கீழே விழுந்து வணங்கி எழுந்தான். 'சாரங்கா, உன் பேச்சைக் கேட்காமல் போனேனே, ஈசனிடமே இல்லை என்று சொன்ன எனக்கு இனி வாழ்வில் என்ன இருக்கிறது' உடல் குலுங்கியது.

''ஏனுங்க எழுந்திருங்க! நீங்க மிகவும்பேறு பெற்றவங்க. பரமன் நேரில் வந்து உம்மிடம் விளையாடிபனார். உம் காரணமாக எங்களுக்கும்அவர் தரிசனம்கிட்டியது.சென்ற பிறவியில நீங்க அவருடைய பரம பக்தகான இருந்திருக்க வேண்டும். அதனால்தான் இப்போது உம்மிடமிருந்த அகந்தை என்னும் நோயைத் தீர்க்க இப்படி ஒரு திருவிளையாடல் நிகழ்த்தி உம்மை ஆட்கொண்டிருக்கிறார்''.

ஆம், வியாபாரி உள்ளத்தில் அகந்தை அழிந்தது. அங்கே பகவானைத் தரிசித்தார். வியாபாரியாக மாத்திரம் வந்தவர், வரகவினாயகர் திருச் சந்நிதியில பரம பக்தனாகி நின்றார்.

கூட்டத்திடையே மீண்டும் ஆரவாரம் ஆயிரம் கரும்புகளும் பழையபடி புதுப் பொழிவுடன் திகழ்ந்தன. வினாயகப் பெருமானின் கொண்டிருந்தனர்.

''ஏனுங்க! உமக்கு ஒரு நஷ்டமும் இல்லாமல் காப்பாற்றிவிட்டார் வினாயகர். உம் கரும்புகளைப் பார். அத்தனையிலும் சாறு வந்துவிட்டது'' என்றான் சாரங்கன்.

நிமிர்ந்து சாரங்கனை நோக்கினான் வியாபாரி. அதில் பரிபூரண அமைதி இருந்தது. உண்மைதான் ஒரு நஷ்டமும் இல்லாமல காப்பாற்றிவிட்டார். சாரற்ற சக்கையாக இருந்த என உள்ளத்திற்கு சாரத்தை அளித்து விட்டார். மெய்ப் பொருளை உணர்த்திவிட்டார். கைப்பொருள் நாடிகாலத்தை வீணே கழித்த எனக்குப் பிறவிப்பயனை காட்டிவிட்டார். அயிரம் கரும்புகளையும் அண்ணலுக்கே காணிக்கையாக்குகிறேன். கரும்பு கேட்ட கரிமுகத்தானுக்கு, கரும்டாயிரம் ஒறுத்தவனுக்கு இதுவரை நான தேடித் சேர்த்த செல்வமும் முழுவதும் சமர்ப்பணமாகாட்டும். அது மாத்திரமல்ல. என் ஐம்புலன்களும் பணமும் இனி இம் மகேசன் மைந்தனுக்கே அடிமை''.

விளையாடலை முடித்துவிட்ட வராக வினாயகர், கருவறைவிட்டு வந்து வியாபாரி மனவறையை சுத்தப்படுத்தியவர் முறுவலுடன் இன்றும் வராகத் தீர்த்தக் கரையில் கோயில் கொண்டு அருள்பலித்துக் கொண்டிருக்கிறார்.

# எடைக்கு எடை தங்கம்

தஞ்சையை அசசுதப்ப நாயக்கர் ஆண்டபோது, அவரது முதலமைசசராகப் பணிபுரிந்தவர். கோவிந்த திட்சிதர். இவர் குடபமகாணத்துக்கு அருகிலுள்ள பட்டீஸ்வரத்தில் வாழ்ந்தார். ஒரு சமயம் மன்னருக்கும் அமைச்சருக்கும் திருப்பணி சம்மந்தமாக கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அந்த நேரத்தில் பட்டீஸ்வரம் ஸ்ரீ தேனுபுரீஸ்வரர் திருக்கோயில் குளத்தின் அருகில் அமர்ந்திருக்கும் ஸ்ரீ ஆக்ஞாகணபதிக்கு திட்சிதர் அபிஷேகம் செய்வதற்காக வைத்திருந்தபாலை மன்னர் தட்டிவிட்டு விட்டார். ஆனாலும் தீட்சிதர் அதைப் பொருட்படுத்தாமல் குளத்திலிருந்து நீர் எடுத்து அபிஷேகம் செய்ய அந்த நீர் பாலாக மாறியது. இந்த அதிசயத்தைக் கண்டு பயந்து போன மன்னர் கோவிந்த தீட்சிதரிடம் மன்னிப்புக் கேட்டதுடன், தான செய்த தவறுக்குப் பரிகாரம் கேட்டார். ''ஸ்ரீ ஆக்ஞா கணபதியின் பெயரிலேயே மானியம் எழுதிக் கொடுக்க வேண்டும். தன்னை அவமதித்த குற்றத்துக்கு தன் எடைக்கு எடை பொன் தர வேண்டும்' என்று கூற, மன்னரும் அவ்வாறே செய்தார். அப்படித் தராசில் உட்கார்ந்து தான் பெற்ற தங்கத்தைக் கொண்டுதான் தீட்சிதர் மகாமகக் குளத்தைச் சுற்றி அமைந்துள்ள பதினாறு லிங்கங்களுக்கும் கல் மண்டபங்கள் கட்டி, குளத்துக்கும் கற்கள் வைத்து செப்பனிட்டார். தீட்சிதர் தராசில் அமர்ந்த கோலம் இன்றும் மண்டபம் ஒன்றில் காட்சியாகச் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். மகான் கோவிந்த தீட்சிதர் வம்சத்தில் வந்தவர்தான் நமது காஞ்சி மாமுனிவர் பரமாச்சார்ய சுவாமிகள். அதுமட்டுமல்ல. தீட்சிதர் தஞ்சை மன்னனுக்குச் சரிசமமாக ஒரே ஆசனத்தில் அமர்ந்து ராஜ்ய பரிபாலனம் செய்தவர். தஞ்சை அரசின் முதலமைச்சராக இருந்து கொண்டே அவர் ஆலயங்களைப் பராமரிக்கும் துறையையும் கவனித்துக் கொண்டார். பட்டீஸ்வரம் ஞானம்பிகை அம்மனிடத்தில் மிகவும் ஈடுபாடு கொண்ட அவர் அந்தத் திருக்கோயிலுக்கு அப்போதே திருப்பணி செய்தவர். இன்றும் தீட்சிதர் தன் மனைவியுடன் கைகுவித்த நிலையில் பட்டீஸ்வரம் ஸ்ரீ ஞானாம்பிகை சந்நிதியில் சிலைவடிவில் காட்சியளித்துக் கொண்டிருக்கிறார்.

**தகவல் : வி.ஆர். கோபாலன்**
**நன்றி : ஆனந்த விகடன்**

# கும்பகோணத்தில் கோயில்கள்

கதிர். தமிழ்வாணன், குடந்தை.

—(முன்தொடர்ச்சி)

திருக்குடந்தைத் திருநகரைப் பொலிவு செய்யும் திருக்கோவில்கள் :

6. அருள்மிகு கும்பநாயகர் (ஆதிகும்பேசர்):

திருக்குடந்தைக்குச் சிறப்பான பெயர் பெற்ற காரணத்தால் விளங்கும் கும்பநாயக பெருமான், நகரின் நடுவணாக மங்கல நாயகி யுடன் எழுந்தருளி, அன்பர்கட்கு அருளை வழங்குகின்றான். தேவாரத் திருபாடற் சிறப் புடையது. மங்கலக் கூவம் என்னும் தூநீரை யுடையது. இந்நீர்ச் சிறப்பை, ''நீரில் இன் சுவை நிகழ்த்தோன் வெளிப்பட'' என்கின்றது தேவாரம். இப்பெருமானின் புகழைக் கூறும் திருக்குடந்தைப் புராணம் பாடல்.

''பூமேய வாரணனும் நாரணனும்
வாரணனும் பொற்பூ மாலைத்
தேமேய விண்ணவரும் நண்ணவரும்
டசுமூலதாஞ் சிறப்பு நல்கி
மாயே குடமூக்கி னிடமூக்கின்
பார்க்கருணை வடிவின் மேய
பாமேய புகழ் ஆதி கும்பேசர்
தாமரைத்தாள் பணிந்து வாழ்வோம்.

7. அருள்மிகு நாகநாயகர் (நாகேசுவரம்):

இப்பெருமான் எழுந்தருளியுள்ள திருக் கோவிலைக் குடந்தைக் கீழ்க்கோட்டம் எனச் சிறப்பித்து பாடுகின்றார் ஆளுடைஅரசு. மடந்தைப் பாகர் என்னும் பெயரினராய்ப் பெரிய நாயகியம்மையுடன் இப்பெருமான் வீற்றிருக்கின்றார். அவனியைத் தாங்கும் ஆதி சேடனும், கதிரவனும் வழிபட்ட பெருமைக் குரியவர்.

கதிரவனின் கதிர்கள் இப்பெருமானின் திருமேனியின் மீது ஆண்டுதோறும் சித்திரை திங்கள் 11, 12, 13 ஆகிய நாட்களில் முறையே அடி, நடு உச்சிப் பகுதிகளில் ஒளி வீசுவதை இன்றும் கண்கூடாகக் காணலாம். இங்ஙனம், இவ்விறைவனைக் கதிரவன் வழிபடுகின்றான் என்னும் கருத்து ஒருபுறம் நிற்ப, இவ்வொளிச் சாயல்செய்தி, பண்டைத்தமிழர்களின்கட்டடக் கலையின் நுட்பத்தை நன்கு புலப்படுத்துகின் றது.

''கடுவடுத்த நீர்கொடுவா காடிதா வென்று
கடுகடுத்து நாவடக்கா முன்னம்-பொடியடுத்த
பாழ்க்கோட்டஞ் சேராமுன் பன்மாடத்
தென்குடந்தை
கீழ்க்கோட்டஞ் செப்பிக் கிட.''

என்னும் ஐயடிகள் காட்வர்கோனின் திருப் பாடல் இத்திருக்கோவிலின் சிறப்பினை அணி செய்கின்றது. மறைக்காட்டுப் பகவன் என் பான, எரியூட்டிய தன் தந்தையின் சாம்பலை காசிக்கங்கையிற் கரைக்கப் புறப்பட்டு, இடை யில் குடந்தையில் தங்கியபோது எலும்பு மல ராக மலர்ந்ததை அறிந்து, காவிரியில் இட்டு, நீராடிப்பேறு பெற்றான். அவ்விடமே பகவன் படித்துறை எனப்படுகின்றது.

8. அருள்மிகு மேல்முகநாயகர் (அபிமுகேசர்):

ஊழிக்காலத்து அமுதகும்பம் சிதறியபோது ஓடிவிழுந்த தேங்காய் சிவத்திருமேனியாகிய இடம் என்னும் சிறப்பிற்குரியது. ஆறுகளாகிய கன்னியர் மாமக நீராடியபோது, இறைவர் மேற்கு (மேல்) முகமாக அமைந்து, தம் அருட் காட்சியை நல்கியமையினால், இப்பெருமான் மேல்முக நாயகர் எனச்சிறப்பிக்கப்படுகின்றார். இப்பெருமான் அமுதவல்லி அம்மையுடன் எழுந்தருளியுள்ளார்.

சுதமன் என்னும் மறையவற்குச் சுமதி என்னும் தவப்புதல்வி ஒருத்தி இருந்தாள். அவள் தொழுநோயால் வருந்தினாள். பின் குடந்தையடைந்து, மாமகத்தூ நீராடி, இப் பெருமானை வழிபட்டு, நோய் நீங்கி நல்ல கணவனையடைந்து நன்மகனையும் பெற்றாள் என்பர்.


மற்றும், மகதநாட்டு மன்னன் ஒருவன் தம் ஊமைக் குழந்தையுடன் வந்து, இப் பெருமானை வணங்கி, குழந்தையின் ஊமைத் தன்மை நீங்கப்பெற்றான் என்பர். இந்நிகழ்ச்சி களால், இப்பெருமானின் திருவருட் பொலிவுத் தெளிவுறுத்தப்படுகின்றது.

9. அருள்மிகு அண்டநாயகர் (காசிவிசுவநாதர்);

''எல்லாத் தலங்களிலும் ஏற்றம் விசுவேசம்
எல்லாத் தீர்த்தங்களிலும் ஏற்றம் மகதீர்த்தம்
எல்லா மூர்த்திகளுக்கும் ஏற்றமுள திம்மூர்த்தி''

என்னும் சிறப்பிற்குரிய இத்திருக்கோவில், மாமகத் திருக்குளத்தின் வடகரையின் கண், உருவேறிய அண்ணல் (காயாரோகணர்) என்னும் திருப்பெயரோடு தடங்கண்ணி விசா லாட்சி அம்மையோடு எழுந்தருளியுள்ளார். இத்திருக்கோவிலைத் திருக்குடந்தை காரோ ணம் என்று தேவாரம் கூறுகின்றது.

ஆற்றுக் கடவுளராகிய ஒன்பது கன்னிய ரும், சிவபெருமானை நண்ணி, மாந்தர்கள் தம்பால் வந்து நீராடிப் புனிதமடைகின்றனர்; அவர்களால் கழுவப்பட்ட பாவங்கள் தங்களை பற்றியுள்ளன; அப்பாவத்தினின்றும் நாம் கடைத்தேற வேண்டிநிற்பவும், தென்னாட்டுத் திருக்குடந்தைச் சென்று, மாமகத்தூ நீராடிப்



தேவிமார்களுடன் அருள்மிகு சக்கரபாணி சுவாமிகள்

புனிதமடையுமாறு திருவாய் மலரவும், அத் திருவூர்த்தமக்குத் தெரியாதெனக் கூறவே, காசியில் தங்கியிருந்த ஒன்பது கன்னியர்களையும் தாமே அழைத்து வந்து, மகாமகப் பொய்கையைக் காண்பித்தருளி தாமும் அதன் வடகரையில் கோவில் கொண்டருளினார் என்றும் புராணம் உரைக்கின்றது. அவ்விடமே காசி விசுவநாதர் திருக்கோவிலாம்.

தூநீராடிய ஒன்பது கன்னியரும், பொழுது புலர்ந்த பின் அண்ட நாயகரைத் தெண்டனிட்டு, அவர்கள் அருளைப் பெற்று, பெருமானுடைய திருமேனியில் அடைக்கலமேறினர். எனவே காயத்தில் ஆரோகணித்தமையின், அப்பெருமான் காய ஆரோகணர் அஃதாவது உருவேறிய அண்ணல் என அழைக்கப்படுகின்றார்.

### 10. அருள்மிகு அம்புஏவிய அண்ணல் (பாணபுரீசர்):

ஊழிக்காலத்துக் கயிலையம்பெருமான் வேட்டுவ உருக்கொண்டு, அம்பு விடுத்து கும்டத்து அடங்கியிருந்த அமுதத்தை வெளிப்படுத்திய இடமாகும். இவ்விடம் இன்று பாணாத்துறை என அழைக்கப்படுகின்றது.

இத்திருக்கோவிலின் கண் அம்பேவிய அண்ணல் (பாணபுரீசர்) என்னும் திருப்பெயர்ப் பொலிவுடன் கலைமதி நாயகி (சோமகலாம்பிகை) அம்மையுடன் எழுந்தருளியுள்ளார்.

வங்கநாட்டு மன்னன் சூரசேனன் என்பவன், பெருநோயால் துயருற்ற தன் மனைவி காந்திமதியுடன் வந்து இப்பெருமானை வழிபட்டுப் பெருநோய் நீங்கப் பெற்று, மகப்பேறும் பெற்றான் என்பது வரலாறு.

### 11. அருள்மிகு கௌதமேசுவரர்


மாமகக் குளத்தின் தென மேற்குக் கரையில் அமைந்துள்ளது. கௌதம முனிவரால் வணங்கப் பெற்ற பெருமானாதலின், கௌதமேசர் என அழைக்கப்படுகின்றார்.

கௌதம முனிவர் என்பவர், ஒரு காலத்தில் வற்கடம் தோன்றியபோது, தனது தவவலியால் அனைவர்க்கும் உணவளித்துக் காத்தார். அவரிடம் உண்டுகளித்த வஞ்சகர் சிலர் மாயபசுமாடு ஒன்றை விடுக்க, இம்முனிவர் தம் அவாவின் மிகுதியால் அப்பசுவின் முதுகை வருட ஆவின் ஆவி பிரிந்தது. அப்பாவத்தால் பற்றப்பட்ட முனிவர் துருவாச முனிவரின் கட்டளைப்படி, இத்திருக்கோவிலை அடைந்து, வழிபட்டு பாவம் நீங்கப்பெற்றார்.

### 12. அருள்மிகு மதியுடைநாயகர் (சோமேசர்):

அமுதகுடத்திற்கு அடிப்படையாயிருந்த உறி, இறைவன் ஏவிய அம்பால் சிதறுண்டு, பொற்றாமரைப் பொய்கைக்குக் கிழக்கில் விழுந்து, சிவனுருவாயிற்று. எனவே இப்பெருமான் உறியுடையார் (சிக்கேசர்) எனவும் அழைக்கப்படுகிறார்

தேவகுருவால் சாபம்பெற்ற மதி, இப்பெருமானை வழுத்தி, வணங்கி, சாபம் நீங்கப் பெற்றானாதலின் இப்பெருமான் மதியுடை



அருள்மிகு ஆதிகும்பேசுவரர்

நாயகர் என அழைக்கப்படுகின்றார். இவ்விறைவன், மதியழகி (சோமசுந்தரி) யுடன் எழுந்தருளியுள்ளார்.

திருக்குடந்தை திருமுறை மன்றத்தார், திருஆரல் நாள்தோறும் (திருகார்த்திகை) பன்னிரு திருமுறை இன்னிசையும் சமயச் சொற்பொழிவும் தொடர்ந்து நடத்திவருகின்றனர்.

13. அருள்மிகு கம்பட்ட விசுவநாதர்

நகரின் தென்மேற்குத் திசையில், இன்பவல்லி அம்மையுடன் இப்பெருமான் எழுந்தருயுள்ளார். தஞ்சை நாயக்க மன்னர்களால் வழிபடப்பெற்றதென அறியப்படுகின்றது.

இத்திருக்கோவில் அமைந்துள்ள இடத்தில் பண்டைச் சோழ மன்னர்களின் கம்பட்டம் என்னும் நாணயச்சாலை அமைந்திருந்தமையால், இப்பெருமானைக் கம்பட்ட விசுவநாதர் எனவும் வழங்குவர்.

14. அருள்மிகு காளத்திநாயகர் (காளத்தீசர்)

நகரின் வடபுறத்தில், காவிரிக்கரையை ஒட்டிய மடத்துத் தெருவில் இத்திருக்கோவில் அமைந்துள்ளது. இக்கோவில் 'ஓம்' வடிவத்தில் அமைந்துள்ளது. இக்கோவிலின் மணியை ஒலித்தாலும் ஓம் எனும் ஒலி உண்டாகும்.

இத்திருக்கோவிலின் கண் எழுந்தருளியுள்ள கொற்றவை பதினெட்டுக்கைகளுடன் எழுந்தருளியுள்ளமை சிறப்பிற்குரியது.

15. அருள்மிகு வீரபத்திரர்

இத்திருக்கோவில் மாமகப் பொய்கையின் வடபாலுள்ள, காசிவிசுவநாதர் திருக்கோவிலின் அண்மையில், வடமேற்கில் அமைந்துள்ளது. பசவம்மையின் திருவுருவம் திகழ்கின்றது.

தக்கயாகப் பரணி இயற்றிய தகைசால் புலவர், பாவலர்கோமான் ஒட்டக்கூத்தர் திருவுருவம் சிறப்புற அமைக்கப் பெற்றுள்ளது. இது வீரசைவப் பெரிய மடத்தின் அருளாட்சிக்கு உட்பட்டுத் திகழ்கின்றது.

## வைணவத் திருக்கோவில்களின் மாண்பு

16. அருள்மிகு சாரங்கபாணி: இந்நகரின்கண் பொலிவுடன் திகழும் வைணவத் திருக்கோவில்களில், சாரங்கபாணிக் கோவில் சிறப்புடன் திகழ்கின்றது. இது பொற்றாமரைக் குளத்தின் மேற்புரம் அமைந்துள்ளது. இத்திருக்கோவிலின் கண் எழுந்தருளியிருக்கும் ஆராவமுதப் பெருமான் கோமளவல்லித் தாயாருடன் காட்சியளிக்கின்றார். சார்ங்கம் எனும் வில்லினைக் கையிலுடையவராதலின் சாரங்கபாணி என்னும் திருப்பெயரைப் பெற்றார்.

இப்பெருமான் பள்ளிகொண்டு, அறிதுயில் புரிகின்ற கோலத்துடன் காட்சி அளிக்கின்றார். எழுந்தருளும் திருமேனியின் திருப்பெயர் சாரங்கபாணி என்பதாகும். திருக்குடந்தைத் திருநகரிலுள்ள சைவ, வைணவத் திருக்கோவில்களின் கோபுரங்களிலேயே மிகவும் உயரமானதும், சற்றேறக்குறைய 150 அடி உயரம் உடையதும் இத்திருக்கோவிலேயாகும்.

''ஆரா வமுதே அடியே னுடலம்
நின்பா லன்பாயே
நீரா யலைந்து கரைய உருக்கு
கின்ற நெடுமாலே
சீரார் செந்நெல் கவரி வீசும்
செழுநீர்த் திருக்குடந்தை
ஏரார் கோலம் திகழக் கிடந்தாய்
கண்டே னெம்மானே''

என்று இப்பெருமானை நம்மாழ்வார் பாடிப் பரவுகின்றார்.

திருநாரையூர் அருள்மிகு பொல்லாப் பிள்ளையாரின் திருவருளைப் பெற்ற நம்பியாண்டார் நம்பிகள், தேவார திருமுறைகளைத் தில்லையினின்று வெளிப்படுத்தியதைப் போல், காட்டுமன்னார் கோவிலிலிருந்த தவச்சீலர் நாதமுனிகளிடம் வந்த அடியவர்களிற் சிலர் 'ஆரா அமுதே' என்ற திருவாய்மொழியைப் பாடவும், அதனைக் கொண்டே அவர் ஏனைய



**அருள்மிகு மங்களாம்பிகை**

திருவாய் மொழிகளையும் சிற்றிலக்கியங்களையும் (பிரபந்தம்) இத்திருக்கோவிலினின்று வெளிப்படுத்தினார்.

**17. அருள்மிகு இராமசுவாமி :** தஞ்சையை ஆண்ட இரகுநாதநயக்கர் என்ற நாயக்க மன்னரால் 16 ஆம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப் பட்டது. இம்மன்னர் குடந்தைக்கு மேற்கே இருகல் தொலைவிலிருக்கும் தாராசுரம் எனும் இடத்திலுள்ள குளத்திலிருந்து இராமர், சீதை முதலிய படிமங்களைக் கண்டெடுத்துக் கொண்டு வந்து இத்திருக்கோவிலில் கடவுள் மங்கலம் செய்வித்தார் எனக் கூறப்படுகிறது. இராமரும் சீதையும் முடிசூடும் கோலத்தில் காட்சியளிக்கின்றனர். இத்திருக்கோவிலின்கண் இராமாயண வரலாற்றினைச் சிற்பம் மற்றும் ஓவியங்களைக் கொண்டு சிறப்பாக அமைத்திருக்கின்றனர். இக்கோவிலை உட்புறமாக மும்முறை வலமவரின் அச்சிற்ப ஓவியங்களின் மூலம் இராமாயண வரலாறு முழுவதையும் அறியுமாறு அமைக்கப்பட்டிருப்பது இத்திருக்கோவிலின் தனி மாட்சியாகும்.

**18. அருள்மிகு சக்கரபாணி :** இத்திருக்கோவில் பழமையானது. திருமால் சக்கர வடிவிலே காட்சி தருகின்றார். முனிவர்கள் பலரும் குடந்தையில் தங்கி, பலவேறு வேள்விகளைச்செய்து இன்புற்று வாழ்ந்து வரும் காலத்து, அவர்களின் மகிழ்ச்சியைக் கண்டு அழுக்காறு கொண்ட அவுணர்கள் அதனை அழிக்கத் தொடங்கினர்.

இக்கொடுமையால் துன்புற்ற முனிவர்கள், கும்ப நாயகரிடம் விண்ணப்பிக்க அவரும் திருமாலை அழைத்து, சக்கரப்படையில் புகுந்து, முனிவர்களைக் காக்குமாறு பணித்தார். திருமாலும் அங்ஙனமே காத்தருளினார். அப்போது ஏற்பட்டச் சக்கரப் படையின் பேரொளி கதிரொளியைத் தன்பாலிழுக்கவே அது கண்டு அஞ்சிய கதிரவன் சக்கரப்படை அண்ணலை வழிபட்டு, ஒளிபெற்றனர். இக்கோவிலைச் சார்ந்துள்ள, காவிரிக் கரையில் சக்கரப்படித் துறை இன்றும் நின்று நிலவுகின்றது.

தஞ்சை சரபோசிமன்னன் ஒருமுறைக் கொடு சூலையால் வருந்தித் துன்புற்றுப் பெருமாளை நினைந்து, வணங்கி அப்பெருமானின் திருவருளால், நோய் நீங்கப் பெற்றான். அதனால், இப்பெருமாளிடம் தன் உள்ளத்தைப் பறிகொடுத்தான். இதன் அடையாளமாக ஊழி உள்ளளவும், இப்பெருமாளை வணங்கியபடியே இருக்கவேண்டுமெனக்கருதி, அக்கருத்தின் மொத்த உருவமாய்த் தன் உயரத்திற்கு வெண்கலச் சிலையொன்றை வடித்தமைத்தான். அத்திருக்காட்சி இன்றும் இப்பெருமான் முன் நின்று நிலவுகின்றது

**நான்முகனுக்கோர் நற்கோவில் :** ஊழிக் காலத்தில் மட்குடத்திலிருந்து படைக்கும் கருப் பொருட்களை ஒருங்கு திரட்டிவைத்த நான்முகன் ஆகிய பிரமனுக்கும் ஒரு திருக்கோயில் குடந்தையில் அமைக்கப்பட்டுள்ளது. அஃது இப்போது அருள்மிகு வேத நாராயணப் பெருமாள் திருக்கோவில் என அழைக்கப்படுகின்றது.

பொதுவாகப் பிரமனுக்குத் தமிழ்நாட்டில் திருக்கோவில் அமைந்திருப்பது மிகவும் அரிது. குடந்தையில் மட்டும்தான் உள்ளது என்று கூடச் சொல்லலாம். இத்திருக்கோவில் மிகவும் தொன்மையானதும் வரலாற்றுச் சிறப்புடையதுமாகும்.

இங்ஙனம் திருக்குடந்தை நகரிலும், நகரை சுற்றியுள்ள பல்வேறிடங்களிலும் எண்ணற்ற சிவன் கோவில்களும், திருமால் கோவில்களும் நிரம்பியுள்ளன. விரிக்கிற் பெருகுமாதலின் இவ்வளவோடு சுருக்கியமைக்கின்றேன்.

''வான்முகில் வழாது பெய்க,
மலிவளம் சுரக்க, மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறையிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலகம் எல்லாம்.

**நன்றி :** *1980 மகா மகத்தையொட்டி, வெளியான 'கும்பகோண வழிகாட்டி' மலரிலிருந்து நன்றியுடன் வெளியிடப்படுகிறது.*

# மக்கள் கடல் மோதிய மகாமகப் பெருவிழா

குடவாயில் பாலசுப்பிரமணியன், எம்.ஏ.,

''பூமருவும் கங்கை முதற் புனிதமாம் பெருந் தீர்த்தம்
மாமகந்தா னாடுவதற்கு வந்து வழிபடுங் கோயில்
தூமருவு மலர்க்கையால் தொழுது வலங் கொண்டணைந்து
காமர்கெட நுதல் விழித்தார் கழல் பணிந்து கண்களித்தார்''

என்பது தெய்வ சேக்கிழார் பெருமானின் திருவாக்கு. இரண்டாம் குலோத்துங்க சோழனின் (கி.பி.1133-1150) முதல அமைச்சராகத் திகழ்ந்த சேக்கிழார் பெருமானார் புனிதமான பெருந்தீர்த்தநில் மாமகம் ஆடும் இக் காட்சியினைத் திருத்தொண்டர் புராணத்தில் திருஞான சம்பந்தர் வரலாறு கூறுமிடத்துப்பாடுகின்றார். மேலும்,

'திருஞானசம்பந்தர் திருக்குடமூக்கினைச் சேர
வருவார்தம் பெருமானை வண்டமிழின் திருப்பதிகம்
உருகா நின்றுளம் மகிழக் குடமூக்கை உவந்திருந்த
பெருமான் எம் இறை என்று பெருகிசையால் பரவினார்''

என்றும் கூறுகின்றார். எனவே 12 ஆம் நூற்றாண்டில் இவ்வாறு சேக்கிழார் பெருமானால் குறிப்பிடப்படும் குட மூக்காம் கும்பகோணத்தில் நிகழ்ந்த மாமகம் ஆடும் (மகாமகநன்னாளில் புனித நீராடுதல்) நிகழ்ச்சி திருஞான சம்பந்தப்பெருமான் வாழ்ந்த கி.பி 7 ஆம் நூற்றாண்டிலேயே நிகழ்ந்த புனித விழா என்பதை அறியலாம்.

மாமகந்தான் ஆடும், கங்கை முதற் புனிதமான பெருந் தீர்த்தங்கள் பற்றி திருஞான சம்பந்தப் பெருமானார் காலத்திலேயே வாழ்ந்த திருநாவுக்கரசரான அப்பர் அடிகள் தம் திருக்குடந்தை தேவாரப் பதிகங்களில் மிக அழகாகக் குறிப்பிடுகின்றார்.

''கங்கையாளவள் கன்னி எனப்படும்
கொங்கையாள் உறையும் குட மூக்கிலே''
''கோதாவரியுறையும் குட மூக்கிலே''
''சாமியோடு சரசுவதி அவள்
கோமியும் உறையும் குட மூக்கிலே''

எனவரும் திருக்குடமூக்குப் பதிகப் பாடற் பகுதிகள் காண்க.

இங்கு கங்கை, காவிரி (கன்னி), யமுனை (சாமி) சரசுவதி, கோதாவரி ஆகிய புனித நதிகள் குடமூக்கில் (கும்பகோணத்தில்) உறைந்ததாகக் காண்கிறார். அடுத்து குடந்தை கீழ்க் கோட்டத்து (நாகேசுவரன் திருக்கோயில்) இறையவரை பணிந்து போற்றும் பதிகத்தில்.

''காவிரி நல் யமுனை கங்கை சரசுவதி பொற்றாமரை புட்கரணி
தெண்ணீர்க் கோவியோடு குமரி வரு தீர்த்தஞ்சூழ்ந்த
குடந்தை கீழ்க் கோட்டத்து எம் கூத்தனாரே''

என்றும் கூறுகின்றார்.


வாகீச பெருமானின் இவ்வாக்குகளால் கி.பி.7 ஆம் நூற்றாண்டிலேயே பொற்றாமரைத்திருக்குளம் கும்பகோணத்தில் திகழ்ந்ததை அறிகிறோம். திருஞானசம்பந்தர்கண்ட மாமகம் ஆடும் பெருவிழாவின்போது இந்தியத் திருநாட்டின் புனித நதிகள் திருக்குடந்தையில் சங்கமித்தன என்பதை சமயக் குரவர்களின் திருப்பாடல்களால் உணரலாம். இவ்வாறு நதிகள் சங்கமிப்பது கோள் நிலை கூடும் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையே என்பது நம் முன்னோர் கண்ட மரபாகும்.

புவியில் நிகழும் நலங்களும், கேடுகளும் கோள்களின் இயக்க அடிப்படையில் நிகழ்பவையே என்பது நம் முன்னவர்கள் பல ஆயிரம் ஆண்டுகளாக கண்டுணர்ந்த பேருண்மையாகும். வானவியல், கணிதவியல் துறைகளில் ஆழ்ந்த புலமையோடு அவர்கள் கண்ட உண்மைகள் நம் இலக்கியங்கள் செப்பும்.

தன் பார்வை இழந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவொற்றியூர் இறைவனிடம் தன் அல்லல் களைய தான் படும் துயரினை எடுத்து இயம்புமிடத்து

''மகத்திற் புக்கதோர் சனி எனக் கானாய்''
என்று குறிப்பிடுகின்றார். மக விண்மீனில் (நட்சத்திரம்) சனி நுழையும் போது (சிம்மராசியில் பிரவேசிக்கும் போது) மகநாளில் பிறந்தவர் படும் பாடு எவ்வளவோ அவ்வளவு துயரங்களை நான் அனுபவிக்கிறேன் என்று கூறுகிறார்.

சனி தனக்குப் பகை வீடான சிங்கராசியில் உலகிற்கு பெருந் தீங்கு விளைவிப்பான். என்பது சோதிட நூல் வல்லோர்தம் கணிப்பாகும்.



— மகாமகக் குளம் —

முப்பது ஆண்டுகளுக்கு ஒரு முறை பகத்கதில்புகும் சனியினால் எவ்வளவு பெருங்கேடுகளோ அதற்கு நேர் எதிராக 12 ஆண்டுகளுக்கொருமுறை நற்பலங்களை நல்கும். கோள் நிலை கூடலே மாமக நன்னாளாகும். அன்று குரு சிம்மராசிக்குள் பிரவேசிப்பார். சந்திரனும் இந்த ராசியில் மகநட்சத்திரத்தன்று தங்கி இருப்பார். அதனால் குரு சந்திர யோகச் சிறப்பு உண்டாகிறது. சூரியன் கும்பராசியில் வீற்றிருப்பார். ஒன்றுக்கொன்று ஏழாம் இடமாகக் குருவுக்கும் சூரியனுக்கும் பார்வை ஏற்படும். அன்று பூரண பௌர்ணமி நன்னாள். அதனை மாகப் பௌர்ணமி என்றும் கூறுவர். இப் பெரு நாளில் கும்பகோணத்தில் புனித நதிகள் கூடும் மாமகத் திர்த்தம் ஆடுபவர்களுக்கு எல்லா நலங்களும் பயப்படதோடு உள்ளொளி பெருகி சிவஞானப் பேறும் கிட்டும் என்பதே புனித நீராடுதலின் நோக்கமாகும்.

கும்பகோணமான்மியம் எனும் குடந்தை தலபுராணநூல் தல மகிமையும், தீர்த்த மகிமையும் விவரிக்கின்றது. பேரூழிக் காலத்தில் வெள்ளப் பெருக்கால் உலகம் மூழ்கி அழியும் போது மீண்டும் உயிர்கள் தோன்ற என்ன வழி என பிரமன் சர்வேஸ்வரனை கேட்க, அவர் கூறியபடி அமிருதத்தை மண்ணில் குழைத்து ஓர் குடம் செய்து, அதனுள் அனைத்து சிருஷ்டி பீஜங்களையும் வைத்து அமிருதத்தால் நிரப்பி மேரு மலையில் ஓர் உறியில் வைத்துப் பூசித்து வந்தார். மகா பிரளய காலத்துப் பெரு வெள்ளத்தில் உறியுடன் கலசம் மிதந்து சென்று பிரளயம் முடிந்து வெள்ளம் வடிந்த போது இறைவனின் திருவருளால் அமுதக் குடம் பூமியில் நிலை பெற்றது. பரமேசுவரனின் திருவருளால் அமுத கலசம் அம்பினால் உடைக்கப்பட அமுத வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. இவ்வாறு அமுதம் பரவிய ஐந்து குரோச நிலப்பரப்புதான் பஞ்ச குரோசத்தலம் எனும் கும்பகோணமாயிற்று. அமுதப் பெருக்கால் மீண்டும் உயிர்கள் தோன்றி புவிசெழித்தது. உயிர்கள்தோன்ற காரணமாய் இருந்த பதி குடந்தைபதி. அமுதம் வழிந்தோடி தங்கிய இடம் ''அமுதசரோருகம்'' என்றழைக்கப்பட்டது. அந்த இடம் தான் மாமகத்திருக்குளமும், பொற்றாமரைப் புட்கரணியும் ஆகும். மகாமகநாளில் இங்கு கங்கை, யமுனை, சரயு, சரஸ்வதி, சிந்து, நர்மதை, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி, ஆகிய ஒன்பது நதிப் பெண்களும் நவகன்னியர்களாக வந்து நீராடியதால் ''கன்னியர் தீர்த்தம்'' என்றும் பெயர் பெற்றது.

அமுத கும்பம் வைத்திருந்த இடம் கும்பேசமாகவும், அமுத குடம் இருந்த உறி சிவலிங்கமான இடம் சோமேசம் எனவும், அக்கும்பத்தில் சாத்தி இருந்த வில்வம் நாகேசமாகவும், கும்பத் தேங்காய் அபிமுகேசமாகவும், பெருமான் அமுத குடத்தை வில்லால் சிதைத்த இடம் பாணபுரேசமாகவும், கும்பம் சிதறியதால் அதன் மேல் சுற்றப்பட்ட நூல் சிதறிய இடம் கௌதமேசம் எனவும் அழைக்கப்படலாயிற்று. இவை திருக்குடந்தையில் உள்ள திருக்கோயில்களாகும்.

திருக்குடந்தைப் பெரு நகரில் மூன்று தேவாரப் பாடல் பெற்ற திருக்கோயில்கள் உள்ளன. திருக் குடமூக்கு. குடந்தைக் கீழ்க்கோட்டம், குடந்தைக் காரோணம் என்பவையே அவை. திவ்வியப்பிரபந்த பாடல் பெற்ற வைணவத் திருப்பதி, குடந்தைக்கிடந்தான் உறையும் சாரங்கபாணி திருக்கோயிலாகும்.

கும்பேசுவரர், அமுதேசுவரர், குழகர் என்ற திருநாமங்களால் இறைவனும், மங்களாம்பிகை என்ற பெயரால் இறைவியும் கோலம் கொண்டு திகழும் அருள்மிகு கும்பேசர் திருக்கோயிலே திருக்குடமூக்கு என அழைக்கப்பெறும். இத்

திருக்கோயிலுக்குக் கிழக்காகவும், சாரங்கபாணி ஆலயத்திற்கு மேற்காகவும் திகழும் புஷ்கரணி பொற்றாமரைத் திருக்குளமாகும்.

இறைவன் நாகேசுவரராகவும், (நாகநாத நாதர்) இறைவி பிருஹந்நாயகி (பெரியநாயகி) யாகவும் உறையும் கற்கோயில் குடந்தைக்கீழ்க் கோட்டம் எனும் நாகேசுவர சுவாமித் திருக்கோயிலாகும். எழிலார்ந்த கற்றளியாகத் திகழும் இவ்வாலயம் சோழர் சிற்பக்கலையின் பெட்டகமாகும். உலக கலை வல்லோர் வியக்கும் ஒப்பற்ற சிற்பங்கள் இங்குண்டு. இராமாயண மகாகாவியம், சிவபுராணம் போன்றவை சிற்பங்களாக வடிக்கப் பெற்றுகாட்சி நல்குகின்றன. சோழ அரசர், அரசியர் சிற்பங்களும் இங்குள்ளன.

குடந்தைக் காரோணம் என்பது மாமகக் குளத்தின் கீழ்க்கரையில் உள்ள கோயிலாகும். இதனை சோமேசர் கோயிலென அழைப்பர். மகாசங்கார காலத்தில் ஆன்மாக்களை இறைவன் ஐக்கியமாக்கிக் கொண்ட தலம் காரோணம் எனக் கூறுவர். பாசுபத நெறியில காயா அவரோஹணம் என்றொரு நெறியுண்டு. ஆன்மாக்கள் தான் பெற்ற உடலோடு இறையை அடையும்மார்க்கமே அது. தமிழகத்தில்இரண்டு காரோணங்கள் உண்டு. திருநாகைக் காரோணம் முப் ஒன்று. குடந்தைக் காரோண இறையவர் சோமேசர், சிக்கேசர், சோமநாதர் என்ற பெயர்களாலும், தேவியார் சோமசுந்தர், தேனார் மொழியாள் என்ற பெயர்களாலும். அழைக்கப் பெறுகின்றனர். அமுத கலசம் வைத்திருந்த உறி சிவலிங்கமான தலமாக மான்மியம் உரைக்கின்றது மாமகக் குளக்கரையின் வட பால் உள காசி விசுவேசம் எனும் கோயிலைக் குடந்தைக் காரோணமாகச் சிலர் குறிப்பர். வியாழனும் சந்திரனும் வழிபட்ட தலமாக குடந்தைக் காரோணம் குறிக்கப் பெறுகின்றது

குடந்தை நகரில் 14 தீர்த்தங்கள் புனிதமாகப் போற்றப் பெறுகின்றது. இவற்றுள் 7 தீர்த்தங்கள் தடாகங்களாகும். மூன்று கிணறுகளாகும், கங்கையிற் புனிதமான காவிரித்துறைகள் நான்காகும். இவற்றுள் தலையாயதாகப் போற்றப் பெறுவது மாமகப் புட்கரணியே.

மகாமகத்திருக்குளம் என்ற பெயரோடு திகழும் இப்புனித புட்கரணி பதினைந்து ஏக்கர் பரப்பளவில் பதினாறு மண்டபங்கள், சிறு கோயில்கள் கொண்டு, நடுவில 9 கிணறுகளையும் பெற்றுத் திகழ்கிறது. பிரம்ம தீர்த்தேசம், முகுந்தேசம், தனேசம், ரிஷபேஷம், பாணேசம் கோனேசம், பக்தேசம், பைரேசம், அகத்தீசம், வியாகேசம், கங்காதரேசம், பிரம்மேசம் முக்த தீர்த்தேசம் முதலிய சிறிய சிவாலயங்கள் குளக்கரையை அலங்கரிக்கின்றன. வடமேற்கு திசையில் மிகப் பெரிய துலா புருஷ மண்டபம் உள்ளது. செவ்வப்பநாயக்கர், அச்சுதப்பநாயக்கர், இரகுநாத நாயக்கர் ஆகிய முப்பெரும் தஞ்சை நாயக்க மன்னர்களுக்கு (பாட்டன், தந்தை மகன்,) குல குருவாகவும் மதி அமைச்சராகவும் திகழ்ந்த கோவிந்த தீட்சிதரின் வழிகாட்டலோடுகி.பி. 1600—1632 வரை ஆட்சி புரிந்த மாமன்னன் இரகுநாத நாயக்கன் கட்டுவித்ததே இன்று நாம் கூறும் குளக்கரையும், 16 (சோடச) மகாதான மண்டபங்களும், சிறு கோயில்களும் ஆகும். துலா புருஷ மண்டபத்தில்தான் இரகுநாதன் துலாதானம் நல்கியதாக தஞ்சை அரண்மனை நூலக ஏட்டுச் சுவடிகள் குறிக்கின்றன.

நிர்ணய சிந்து எனும் சமஸ்க்ருத நூல் சோடச மகாதானங்கள் பற்றி விரிவாகக் குறிக்கின்றது. கோதானம், பூமிதானம், படுக்கைதானம், (படுக்கை, விளக்கு, புஷ்பங்கள், பழம், ஆகியவற்றோடு) ஹிரண்யதானம் (தங்கம்),, வெள்ளிதானம், தேர் தானம், கஜதானம்,, (யானை), அஸ்வதானம் (குதிரை), வஸ்திர தானம், தான்யதானம், ரத்தினதானம், வீடு தானம், கம்பளிதானம், கன்னியாதானம், போஜனம்( அறுசுவை உண்டி அளித்தல்), குடை தானம் என்பவை என்றும் விவரிக்கின்றது. இத்தகைய தானங்கள் இப்பெரு மன்னன் மாமகத்தீர்த்தமாடி ஒவ்வொரு மண்டபத்திலும் அமர்ந்து வழங்கியதை இலக்கியங்கள் மட்டுமின்றி இப்பதினாறு மண்டபத்து விதானங்களில் உள்ள சிற்பக் காட்சிகள் வாயிலாகவும் அறியலாம்.

''பூமருவும் கங்கை முதல் புனிதமாம் பெருந்தீர்த்தம் மாமகந்தான் ஆடும்'' காட்சியினை தெய்வச் சேக்கிழார் பெருமான் திருவாக்கால் முன்னரே கண்டோம். இதே மாமகம் ஆட விஜய நகரப் பேரரசன் கிருஷ்ண தேவ ராயர் (கி.பி.1500-1530) கும்பகோணம் வந்ததை அவரது கல்வெட்டுக்களில் பெருமையாயாகக் கூறிக் கொள்கிறார். இவர் கும்பகோணத்தில் மாமக நன்னாளில்நீராடி நாகேசுவரன் திருக்கோயிலில் வழிபட்டு அறக்கொடை நல்கியதை அங்குள்ள கல்வெட்டால் அறியலாம். தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்கள் மாமகப்புனித நீராடியதை தஞ்சைஅரண்மனையில் உள்ள மோடி ஆவணங்கள் விவரிக்கின்றன.

சூரியன் கும்பராசியில் அமர்ந்து மகநன்னாளில் சிம்ம ராசியில் பிரவேசிக்கும் குருவை பார்க்கும் நேரமே புனித மகாமகம் ஆடும் நேரமாகும். அப்போது புனித நீராடி குருவின் அருள் பெற குடந்தை ஈசனை போற்றி வழிபடுவதோடு, சூரிய தேவனையும் வழிபடுதல் வேண்டும். இதற்காக குடந்தையிலேயே சூரியனார்த் திருக்கோயில் எடுத்தனர் நம் முன்னவர்கள். எழிலார்ந்த திருக்கோயில்: நாகேசுவரனார் திருக்கோயில் பிரகாரத்தின் வடகிழக்குப்பகுதியில் உள்ளது. சோழர் கால இத் திருக்கோயிலில் ஆதவன் எழிலோடு நின்று அருள் பாலிக்கின்றார். மாமகநீராடி இக் கோயிலுக்கு வந்து கங்கை கொண்ட கணபதியாரையும், சூரியனையும் வழிபட்டால் நலம் பல விளைக்கும்.

வடநாட்டில் கும்பமேளா, ஆந்திரத்தில் புஷ்கரம் போன்று தமிழகத்தில் திகழும் மாமாமகப் பெருவிழா நிகழும் பிரஜோத்பதி ஆண்டு மாசித் திங்கள் 6ஆம் நாள்18.2.1992 செவ்வாய்க்கிழமை பெரும் உற்சாகத்தோடு கொண்டாடப்பட்டது. சிங்கத்தில்குரு ஏறும் இப்புனித நாளில் மாமக நீராடி 50 லட்சம் மக்கள் இறையருள் பெற்று மகிழ்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தெய்வத் தமிழ்

**டாக்டர் த. அமிர்தலிங்கம்**

தெய்வத் தமிழ்மணக்கும் மாநாடு-இதைச்
செல்வத் தமிழ்கொண்டு நீபாடு
அன்னைத் தமிழுச்கு இதுநன்னாள்
அகிலப் புகழ்காணும், இது பொன்னாள்.
தமிழன்னை தனிப்புகழை
இமயத்தில
ஏற்றுதற்கு
அமிழ்தான குணம் கொண்ட
ஆன்மசக்தி ஆசிரியர்

வெங்கடேசா தான்கண்ட
வெற்றி புகழ் மாநாடாம்
எட்டுதிக்கும் போற்றுகின்ற
தெய்வத்தமிழ் மாநாடாம்
குன்றனைய பொருட் செல்வம்
கொண்டவரும் இவரில்லை
குவலயத்தின் தலைமைதனைத்
தாங்கிநிற்கும் தலைவரில்லை
குன்றாத ஆன்மசக்தி
அருட்சக்தி துணையாலே
திருவருளால் குருவருளால்
கூட்டிவைத்தார் மாநாடு
தீரரிவர் திறமைதனைப்
போற்றாதோ பலஏடு?

ஆன்மசக்தி துணையாலே
அருஞ்செயல்கள் புரிந்திடலாம்
அண்டாண்டம் கடந்துள்ள
ஆண்டவரை அழைத்திடலாம்
உலகெங்கும் வாழும்தமிழ்
நெஞ்சங்கள் வரவழைத்தார்
அலகில்புகழ் ஆதீனம்
ஆன்றோர்கள் படைகுவித்தார்
வெங்கடேசர் ஆற்றியுள்ள
சாதனையோ மிகப்பெரிது
அவர்பெருமை சாற்றுதற்கு
என்நாவோ மிகவறிது.

தமிழோடு தமிழ்க்கடவுள் குமரன் தன்னை
ஒப்பிட்டுப் போற்றிடுவார் புலவோர் அம்மா!
அமிழ்தனைய முருகோற்குப் பன்னிரண்
டாம் தோள்
உயிரெழுத்து அதைப்போல தமிழுக் கும்ஆம்.
இமிழ்ஞால முருகோற்குப் பதினெட் டாம்கண்
இன்தமிழ்க்கும் அதுபோலபதினெட் டாம்மெய்.
தமிழ்க்கடவுள் முருகோற்குக் கைவேல் ஆய்தம்
தமிழ்மொழிக்கு மாத்திரமே சிறப்பாம் ஆய்தம்
முத்தமிழால் வைதாலும் முருகன் காப்பான்
மூப்பாலும் அப்பாலும அவனே சேர்ப்பான்
தித்திக்கும் தமிழ்அவர்க்குப் பஞ்சா மிர்தம்
திகட்டாத திருப்புகழே தேவா மிர்தப்
சித்தனவன் தந்தைக்கோ தமிழ்தான் வேதம்
தமிழுக்காய் மண்சுமந்தான் வையம் பேசும்.
பித்தனவன் உமையாளைஇடத்தில்கொண்டான்
கங்கையுள்ள தலைமேலாய் தமிழ்தான்
கொண்டான்

அடியார்கள் ஆழ்வார்கள் வாக்கில் எல்லாம்
அகமகிழ்ந்து விளையாடும் தமிழே தெய்வம்
முடியுடைய மூவேந்தர் மூச்சில் எல்லாம்
முறுவலித்து விளையாடும் தமிழே தெய்வம்.
அடியார்கள் அருட்காதை அமுதாய்ச் சொட்டும்
அருண்மொழியார் நாவாழும் தமிழே தெய்வம்
படிபடியாய்த் தேன்பிலிற்றும் இளங்கோ கம்பர்
பாட்டெல்லாம் மணக்கின்ற தமிழே தெய்வம்.

தெய்வத் தமிழ்த்தாய்ப் பெருமையெலாம்
தேரா திந்நாள் பலர்கெடுவார்
செய்யாள் திருவாள் நீர்வடிக்க
செவிலித் தாயார் தாள்படுவார்
மெய்யைக் காட்டி குறைகளைய
மேலோர் செய்தார் மாநாடு
தெய்வம் போற்றும் இவர் செயலை;
தெளிந்து சொன்னேன் பாராட்டு.

சிவமென்று சொன்னாலும் குகனென்று
சொன்னாலும்
சுகம்நல்கும் தெய்வம் ஒன்றே.
தேவாரம் சொன்னாலும் திருப்புகழைச்
சொன்னாலும்
கேட்கின்ற தெய்வம் ஒன்றே.
ஓமென்று சொன்னாலும் ஆமென்று
சொன்னாலும்
அருள்கின்ற தெய்வம் ஒன்றே.
மாலென்று சொன்னாலும் மேல்நோக்கித்
தொழுதாலும்
மேலான தெய்வம் ஒன்றே.

ஓர்நாமம் ஒருவம் ஒன்றும் இல்லா
ஒருசக்தி பரம்பொருளே தெய்வம் காணீர்.
திருநாமம் கோடிகோடி என்றா லும்தான்
திருவருளைப் பாலிக்கும் தெய்வம் ஒன்றே.
திருமூலர் முதலான சித்தர் எல்லாம்
தெளிவாக்கிப் போனாலும் தெளிந்தோ
மா நாம?
அருட்சக்தி தனில்டேதம் நாளும் சொல்லி
அப்பப்பா யுத்தங்கள் தவிர்ந்தோ மாநாம்!

ஆறுமுகம் தொழுதாலும் ஒருமுகம்தான் தமபீ!
ஐங்கரனைத் தொழுதாலும் இருகரம்தான் தம்பி
வேறுவேறு சமயமெலாம் புகுந்துநாளும்
பார்க்கின்
பரம்பொருளார் அவர்ஒருவர், நாம்அவர்க்குப்
புதல்வர்
தேறுமிதில் பொய்ம்மையிலை தெளிந்துபலர்
சொன்னார்

---

**[சென்னை தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் கலையரங்கில் தெய்வத்தமிழ் மன்றத்தின் சார்பில். தெய்வத் தமிழ் முதல் மாநாடு 23.2.92 முதல் 26.2.92 முடிய நான்கு நாட்கள் மிகச்சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், ஆன்மீகத் தலைவர்கள், ஆன்றோர்கள் சான்றோர்கள் கலந்துகொண்டு சிறப்பித்த இம்மாநாட்டில் திருக்கோயில் ஆசிரியர் டாக்டர் த. அமிர்த லிங்கம் அவர்கள் படித்த ''தெய்வத் தமிழ்'' கவிதை இது.]**

**அருளாளர்கள் அருள் அனுபவம் கட்டுரை தொடர்ச்சி..**

இறைவன் ஆடும் நடன அரங்கை வெளியேபோய் தேட வேண்டியதில்லை, இந்த உடலிலேயே இருக்கின்றார் என்பார் திருமூலர். இறைவனை நம்முள் தியானிக்கும் இடம் நெற்றிக்கு முன் புருவத்தின் மையபாகும். அங்கே மனதைப் பொருந்தி தியானம் செய்து இறைவனை நாட வேண்டும். அந்த இடமே உயிரானது பற்றுவதற்குரிய இடமாக விளங்குகின்றது என்றால் அது இறைவன் வீற்றிருக்கும் இடமாகும். அதுவே திருச்சிற்றம்பலம். அவ்விடத்தை தீவிரமாக தியானிப்பவர்களுக்கு, உற்று உற்று பார்ப்பவர்களுக்கு அது ஒளிவிடும் மந்திரமாக விளங்கும். இதை அனுபவித்தவர் திருமூலர்.

''நெற்றிக்கு நேரே புருவத் திடைவெளி
உற்றுற்றுப் பார்க்க வொளிவிடு மந்திரம்
பற்றுக்குப் பற்றாய்ப் பரம விருந்திடுஞ்
சிற்றம் பலமென்று சேர்ந்துகொண்டேனே''

(திருமந்திரம்..2770)

இவ்வாறு திருக்கூத்தின் உண்மைப் பொருளை தமக்குள் உணர்ந்தவர்கள் பேறு பெற்றவர்கள். தம்முள்ளேயே சுரக்கும் சிவானந்தத் தேனினை பருகி இன்புற்றவர்கள். இன்பம் மேலிட்டு அவர்களுடைய கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் நிரம்பி வழியும், நெஞ்சு உருகி நிற்கும். மேலும் மேலும் திருக்கூத்தை தரிசிக்கத் தோன்றும். சுவையுள்ள உணவுப் பொருளை நினைத்தபொழுதே நாவில் நீர் சுரப்பது போல, அன்பர்களுடைய உள்ளம் திருக்கூத்தின் காட்சியால் மெய்மறந்து நிற்கும்.

''புளிக்கண் டவர்க்குப் புனலூறு மாபோற்
களிக்கும் திருக்கூத்துக் கண்டவர்க் கெல்லாம்
துளிக்கும் அருட்கண்ணீர் சோர்நெஞ் சுருக்கும்
ஒளிக்குள் ஆனந்தத்து அமுதூறும் உள்ளத்தே'

(திருமந்திரம்...2778)

சான்றோர்கள் தங்கள் அனுபவத்தில் கண்ட இந்த மகத்தான உண்மையை நாம் காண விரும்பினால் அந்த விருப்பம் நிறைவேறுவதற்கு இப்பூவுலகத்தில் தில்லைத் திருத்தலத்தைத் தவிர வேறு இடத்தைக் காண முடியாது. ஏனென்றால் அங்கேதான் ஆதியாய் நடுவாய், அளவிலா அளவுமாகி, சோதியாய் உணர்வுமாகி, தோன்றிய பொருளுமாகி, ஏகம் ஆகி, ஆணாகி பெண்ணுமாகி, இறைவன் திருநடனம் புரிகின்றான். அவன் கற்பனை கடந்த சோதி, கருணையே உருவமானவன், மனதாலும், வாக்கினாலும் இன்னதென்று சொல்ல இயலா அனுபவத்தைத் தருபவன். ஞானத்திற்கு இருப்பிடம். தில்லைத் திருச்சிற்றம்பலத்திலே எழிலுடன் திருக்கூத்து புரிகின்ற அந்த இறைவனுடைய திருவடிகளைப் பேணி, திருமூலர் போன்ற ஞானிகள் பெற்ற பேரின்பத்தை நாமும் பெறலாம். சேக்கிழார் பெருமானுடைய அற்புதமான திருப்பாடல் இதோ:—

''கற்பனை கடந்த சோதி கருணையே யுருவ மாகி
அற்புதக் கோல நீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்து ணின்று
பொற்புட னடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி''.

(பெரிய புராணம்..351)

**(அருளாளர்கள் அருள் அனுபவம் தொடர்ந்து கற்று மகிழ்ந்திடலாம்)**

---

தெய்வமது ஒன்றுஎன்று அறுதியிட்டுச் சொன்னார்
மாறுபட்டுப் போர்புரிவார் மனிதரவர் இல்லை
மாக்களவர் மனிதரென வாழ்வதுதான் தொல்லை.

சைவமது சாற்றுகின்ற தத்துவமும் அன்பே!
வைணத்தார் வாழ்த்துகின்ற தத்துவமும் அன்பே!
தெய்வமறை வள்ளுவமும் போற்றுவது அன்பே
இராமலிங்கர் சன்மார்க்கம் ஊட்டுவதும் அன்பே
மெய்ம்மதங்கள் அத்தனையும் போற்றுவது அன்பே
இதையுணரார் சிலர் இருப்பார் அதனால்தான் வம்பே!
எம்மதமும் சம்மதமே என்றுரைத்தால் போதா
எம்மதமும் என்மதமே என்றுரைத்தால் ஆஹா.

உலக நாயகர் ஒருவர் அதனை
உணர்த்தியதிந்த மாநாடு.
கலகப் பிரியர்கள் பேயர்கள் அவரை
விரட்டிய திந்த மாநாடு
அலகில் மதங்கள் அன்பினில் வாழ
தெளிவு செய்தது மாநாடு.
உலக நேயம் வளர்த்தவர் தமக்கு
ஆயிரம் கோடி பாராட்டு!


எத்தனை கோடி மனிதர்கள் பிறப்பார்?
எத்தனை கோடி மனிதர்கள் இறப்பார்?
அத்தனை கோடி மனிதர்கள் தம்மில்
இத்தரை வாழ நினைப்பவர் எவரோ
அவரே இங்கு மனிதரில் மேலோர்.
அவரே இங்கு மனிதரில் தெய்வம்
ஆன்ம சக்தி வெங்க டேசனார்
அவர்துணை யான காசி ராஜனார்
பெரும்புலவோர் திருஞான சம்பந்தர்
பெருமனத் தார் அண்ணா மலை அடிகள்
இன்னும் பலரிங் கரிதினில் உழைத்து
செயற்கரும் செயலால் மேலவர் ஆனார்
செகம்நனி போற்றும் சீலவர் ஆனார்.

''சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்
இனிஎதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்றபேறிதனால்
எற்றைக்கும் வாய்க்கும் திருவருள் உடையேம்'

சேக்கிழார் வாக்கைக் காட்டிய மேலோர்
செகந்தனில் நீடு வாழ்க வாழ்கவே!
தெய்வத் தமிழ்க்கோர் மாநா டின்று
ஜெயமுறச் செய்தோர் வாழ்க வாழ்கவே!

நன்றி : வணக்கம்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் ந. அமிர்தலிங்கம், M.A., Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.



மக்கள் கடலோ மறிகடலோ எனத் திரண்ட மகாமகப் பெருவிழாக் கூட்டம்.



மகாமகக் குளத்தில் வைத்துப் பூசனை செய்யப்பட்ட 20 புனிதநீர் வெள்ளிக்கலசங்களை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தம் பிறந்தநாள் அன்று [24-2-92[ 20 திருக்கோயில்களுக்குக் காணிக்கையாக வழங்குகிறார்கள்.

அத்திருக்கோயில்களின் அர்ச்சகர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்து வெள்ளிக் கலசங்களைப் பெற்றுக் கொள்கிறார்கள்.